ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 } மார்ச்சு 1959 { இதழ் 3

யானைப் பசிக்குச் சோளப் பொரியா?

“யானைப் பசிக்குச் சோளப் பொரியா?” என்பது தமிழ்நாட்டில் வழங்கி வருகிற ஓர் அருமையான பழமொழியாகும். உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் எதிர்காலத்தைப்பற்றித் தமிழ்நாட்டுக் கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் தெரிவித்த ஓர் அறிவிப்பைக் கண்டதும் இந்தப் பழமொழிதான் நம் நினைவுக்கு வந்தது.

கருப்பங் கழிகளையோ மர மட்டைகளையோ இன்ன பிறவற்றையோ கொண்டு வந்து கொடுத்தால்தான் ஓர் யானைக்கு ஏற்படக் கூடிய நியாயமான பசி அடங்க முடியும். அப்படியில்லாமல், சிறியதோர் சோளப் பொரி உருண்டையை அதன்முன் நீட்டினாலே போதும்—அதன் பசி அடங்கிவிடும் என்று, யானையின் உருவத்தையும் தன்மையையும் அறிந்த யாருமே கூறமாட்டார்கள். ஆனால் அப்

படிக் கூறுவதாகத்தான் அமைந்திருக்கிறது கல்வியமைச்சரின் அறிக்கை.

அடுத்த கல்வி ஆண்டிலிருந்து உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், முதல் ஐந்து வகுப்புகளிற் பயிலும் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்தல் கூடாது என்றும், அப்படி வசூலிக்காமல் இருந்தால்தான் அரசாங்க உதவிப் பணம் அந்தப் பள்ளிகளுக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்றும் சில மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் அறிக்கை ஒன்றைப் பிறப்பித்தார்கள் அல்லவா? அந்த அறிக்கையைக் கண்டு வியப்பும் திகைப்பும் கொண்ட உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், தங்களுடைய சங்கத்தின் மூலமாக, அரசாங்கத்தார் தெரிவிக்கும் முறையில் இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமானால், ஆசிரியர்களின் ஊதிய உதவித் தொகையை (Teaching grant) அரசாங்கத்தார் தொடர்ந்து தருவதோடு, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கான வாடகையையும், பள்ளிக்கூடத்தின் பிற பல செலவுகளுக்காக 30 சதவிகித நிர்வாக உதவித் தொகையையும் அரசாங்கத்தார் தரவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் அல்லவா? அந்த வேண்டுகோளை ஆதரித்து நிர்வாகிகள் சங்கத் தூதுக்குழு ஒன்று அமைச்சர் அவர்களைப் பேட்டி கண்டு உண்மை நிலையை உள்ளது உள்ளபடி விளக்கிக் காட்டியது அல்லவா? அந்த வேண்டுகோள் மிக மிக நேர்மையானது என்பதையும், தவறாமல் ஒப்புக்கொள்ளப்படவேண்டியது என்பதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி நம் "ஆரம்பக் கல்வி" இதழானது தலையங்கங்கள் தீட்டியிருக்கிறது அல்லவா?

இந்த வேண்டுகோள்கள் அத்தனைக்கும் விடை அளிக்கும் வகையில் அமைந்திருப்பதுதான் கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னால் சென்னைச் சட்டமன்றத்தில் ஆற்றியிருக்கும் சொற்பொழிவு. அந்தச் சொற்பொழிவில் அவர், அடுத்த ஆண்டிலிருந்து, கட்டணம் வாங்காமல் நடைபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு, ஆசிரிய ஊதிய உதவித் தொகையோடு 15 சத விகித நிர்வாக உதவித் தொகையை அரசாங்கத்தார் தருவார்கள் என்றும், அதைவிட அதிகமாக நிர்வாகச் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் பள்ளிகளுக்குக் கல்வித் துறை இயக்குநர் (D. P. I.) 20 சத விகிதம் வரையில் நிர்வாக உதவித் தொகையை வழங்குவார் என்றும் எடுத்துக் கூறியிருக்கிறார். கல்வியமைச்சரின் இந்தச் சொற்பொழிவிலிருந்து, உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு, ஆசிரிய ஊதிய உதவித் தொகை—20 சதவிகித நிர்வாக உதவித் தொகை ஆகிய இந்த அளவு உதவிகளைத் தவிர வேறு பண உதவி ஏதும் ஆட்சியாளர்களிடமிருந்து கிடைக்காது என்பது திட்டவட்டமாக விளங்குகிறது.

பல்வேறு விதமான செலவுகளைச் செய்து தீரவேண்டிய நிலையில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு, இந்த அளவு உதவியை மட்டும் தந்து விட்டு, எல்லாச் செலவுகளையும் இந்தப் பண உதவியிலிருந்தே சரிக் கட்டி ஆகவேண்டும் என்று கூறுவது, யானையினுடைய பசிக்குச் சோளப் பொரி உருண்டை ஒன்றை மட்டும் கொடுத்துவிட்டு, "இந்த உருண்டையைக் கொண்டு உன் பசியைத் தீர்த்துக்கொள்" என்று கட்டளை இடுவது போல இருக்கிறது அல்லவா? ஆகையால்தான் அமைச்சருடைய சொற்பொழிவைக் கண்டதும் "யானைப் பசிக்குச் சோளப் பொரியா" என்கிற பழமொழி நம் நினைவுக்கு வந்தது என்று குறிப்பிட்டோம்.

கட்டிடங்களுக்கான வாடகைத் தொகை விஷம் போல ஏறிக் கிடக்கிற காலம் இது. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு, மாதந்தோறும், பள்ளி நிர்வாகிகள் 60 ரூபாயி லிருந்து 200 ரூ. வரையில் வாடகை தரவேண்டியிருக்கிறது. சிறிய வெளியூர்களில்கூட வாடகைத் தொகையானது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஓங்கி உயர்ந்து பயங்கரமான வடி வத்தை அடைந்துள்ள இந்தக் காலத்தில், சென்னையிலும் அது போன்ற பிற பல பெரிய நகரங்களிலும் வாடகையின் உருவம் எவ் வளவு மிரட்சியை அளிப்பதாக இருக்கும் என்பதை நாம் கூறத் தேவையில்லை. அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற 20 சதவிகித நிர்வாகத் தொகை, இந்த வாடகையைச் செலுத்துவதற்குக்கூடப் போதாது. ஆனால் பள்ளி நிர்வாகிகள், வாடகையைச் செலுத்துவ தோடு கூட,

ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு (Provident fund) நிர்வா கத்தார் செலுத்தவேண்டிய பங்கு,

ஆசிரியர்களுக்கு அளிக்கும் அதிகப்படி ஊதியம்,

பள்ளிச் சிறுவர் சிறுமியரை அழைத்து வரும் ஆயாக்கள்—பள்ளிக் கட்டிடத்தைப் பெருக்கிக் கழுவித் துப்புரவு செய்யும் வேலைக்காரிகள்—பல்வேறு சிறு வேலைகளைச் செய்யும் பியூன்கள் முதலியவர்களுக்கு அளிக்கவேண்டிய சம்பளம்,

மேசை, நாற்காலி, நாட்டுப் படம், வெண் சுண்ணத் துண்டுகள் முதலிய கருவிகள் பண்டங்கள் வாங்குவதற்கான செலவு,

பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கும் சுண்ணம்பு அடிப் பதற்கும் ஆகும் தொகை,

ஆகிய இத்தனைச் செலவுகளையும் செய்து தீரவேண்டியிருக் கிறது. இந்தச் செலவுகளையெல்லாம் அவர்கள் இதுபோது மாணவர்

களிடமிருந்து வசூலிக்கும் கட்டணத்தொகையிலிருந்து ஈடுகட்டி வருகிறார்கள். ஆனால் இனி மாணவர்களிடமிருந்து கட்டணம் எதுவுமே வசூலிக்கக்கூடாது என்று அரசாங்கத்தார் தெரிவித்துவிட்டார்கள். அப்படியானால், இந்தச் செலவுகளை யெல்லாம் பள்ளி நிர்வாகிகள் எப்படித்தான் ஈடுகட்டுவது ? இவற்றிற்கெல்லாம் தேவையான பணத்தை அவர்கள் எங்கிருந்து பெறுவது? யாரிடமிருந்தாவது கடன் வாங்கி இச் செலவுகளை ஈடுகட்டினால், அந்தக் கடன்களைப் பின்னர் திருப்பித் தருவது எப்படி ? அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற 20 சத விகித நிர்வாக உதவித்தொகை, கட்டிட வாடகையைச் செலுத்துவதற்குக்கூடப் போதாததாக இருக்கும்போது, இந்தச் செலவுகளை யெல்லாம் ஈடுகட்டுவது எப்படி என்பதை நிர்வாகிகளுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு இருக்கிறதே — ஆனால் அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றவில்லையே, அது ஏன் ?

ஆசிரியர்களுக்கான ஊதியத்தையும், பள்ளிக் கட்டிடத்திற்கான வாடகையையும் அரசாங்கத்தார் தனித்தனியே தந்துவிட்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிற செலவுகளுக்காக 30 சத விகித நிர்வாக உதவித் தொகையையும் தரவேண்டுமென்று நிர்வாகிகள் சங்கத்தார் கேட்டிருப்பது மிக மிக நியாயமான வேண்டுகோளாகும். அவர்கள் கேட்டுள்ள தொகையைவிடக் குறைந்த ஒரு தொகையை வைத்துக் கொண்டு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்துவது என்பது ஒரு நாளும் நடக்காத காரியம் ஆகும். உண்மையை ஒளிக்காமல் கூற வேண்டுமானால், நிர்வாகிகள் சங்கத்தார் கேட்டிருக்கும் தொகையே, நியாயமாகக் கேட்டிருக்க வேண்டியதைவிட மிகக் குறைந்த தொகையாகும். அவர்களே மிகுந்த பொறுப்புணர்ச்சி உடையவர்களாய், மிகக் குறைந்த தொகையைக் கேட்டிருக்கும்போது, அந்தக் குறைந்த அளவு தொகையைக்கூடக் கொடுக்க மறுப்பது எந்த விதத்திலும் நியாயம் ஆகாது.

“அரசாங்கத்தார் தர இருக்கிற 20 சத விகித உதவித்தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்த இயலாது என்று எந்த நிர்வாகியாவது தன் பள்ளிக்கூடத்தை மூடிவிடுவாரானால், அந்த வட்டாரத்தில் புதிய பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கும் உரிமை, அப்படித் தொடங்க முன்வருகிற தனியாருக்கு வழங்கப்படும். அப்படி யாரும் முன்வராவிட்டால், நகராட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அல்லது மாவட்ட ஆட்சி மன்றங்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படும்”. என்பது கல்வியமைச்சர் அவர்களின் சொற்பொழிவில் காணப்படும் மற்றோர் அறிவிப்பு ஆகும். இப்போது ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருபவர்கள், எத்தனையோ

ஆண்டுகளாகப் பள்ளிக்கூடங்களைச் சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் நிர்வாகம் செய்து, அந்தத் துறையில் தெளிந்த அறிவும் நிறைந்த அனுபவமும் படைத்தவர்கள். இப்படிப்பட்ட ஆற்றலும் தேர்ச்சியும் மிகுந்தவர்களாலேயே 20 சத விகித உதவித் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளியை நடத்த இயலாது போய்விட்டால், புதிதாக இந்தத் துறையில் நுழைய இருக்கிறவர்களால் மட்டும் எப்படி அந்தப் பணிபுரிய முடியும்? அனுபவம் நிறைந்தவர்களாலேயே முடியாத செயல், அனுபவமே அற்றவர்களால் எப்படி முடிந்துவிடும்?

நகராட்சி மன்றங்கள் அல்லது மாவட்ட ஆட்சி மன்றங்கள் இந்தப் பள்ளிகளை எடுத்து நடத்தினால், இந்தப் பள்ளிகளுக்கு நிர்வாகிகள் சங்கத்தார் கேட்கிற முறைப்படி உதவித் தொகை அளிப்பதால் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகச் செலவு ஏற்படும்என்பது உறுதியினும் உறுதியாகும். அது மட்டுமல்ல. அளிக்கப்படுகிற கல்வியின் தரம் மிகமிகக் குறைந்துவிடும் என்பதும் மறுக்க முடியாத உண்மை. *இப்போதே நாம் பார்க்கிறோம். தனியார் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரத்தைவிட நகராட்சி அல்லது மாவட்ட ஆட்சி மன்றப் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் மிகமிகக் குறைவானதாக இருக்கிறது. இந்தக் குறைந்த தரத்திற்கு எல்லாப் பள்ளிகளையும் இழுத்துச் செல்வதால், நாட்டுக்கு ஏற்படுவது மிகப் பெரிய நஷ்டம் என்பதை அரசாங்கத்தார் உணராதது ஏன் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.*

இப்போது உள்ள உதவி பெறும் பள்ளிகளில் 1033 மட்டுமே கட்டணம் வசூலித்து வரும் பள்ளிகள் என்றும், இந்தப் பள்ளிகளில் 740 பள்ளிகள் கட்டணம் வசூலிக்காத பள்ளிகளாக இருக்க ஒப்புக்கொண்டுவிட்டன என்றும், மிச்சமுள்ள 293 பள்ளிகளிடமிருந்துதான் சரியான பதில் கிடைக்கவில்லை யென்றும், இப்போது உள்ள நெருக்கடியெல்லாம் இந்த 293 பள்ளிகளை மட்டும் பொறுத்ததுதான் என்றும் 293 பள்ளிகளை மட்டுமே பாதிக்கிற ஒரு பிரச்சினையை மாபெரும் பிரச்னை என்று பத்திரிகைகள் கூறுவது ஒரு சிறிதும் பொருந்தாது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சரின் இந்த உரை முழு உண்மை அல்ல. 740 பள்ளிகள் கட்டணம் வசூலிக்காத பள்ளிகளாக இருக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் தெரிவிப்பது உண்மையாக இருக்கலாம், ஆனால் எந்த அடிப்படையின் பேரில் அவை அப்படியிருக்க ஒப்புக் கொண்டிருக்கின்றன?

பள்ளிக்கூடத்தை நடத்துவதற்கு நியாயமாகத் தேவைப்படும் நிர்வாகச் செலவு முழுவதையும் அரசாங்கம் உதவித் தொகையாகத்

தரும் என்கிற நம்பிக்கையின் பேரிலும், அப்படித் தந்தால்தான் பள்ளிகளை நடத்த இயலும் என்கிற நிபந்தனையின் பேரிலும்தான் அவை அப்படி ஒப்புக் கொண்டிருக்கக் கூடுமே தவிர, 20 சதவிகித உதவித் தொகையை மட்டுமே வைத்துக் கொண்டு பள்ளிகளை நடத்த முடியும் என்கிற நம்பிக்கையில் அல்ல. ஆகவே, இன்றைய தினம் ஏற்பட்டுள்ள நெருக்கடி, அமைச்சர் தெரிவித்துள்ளதுபோல 293 பள்ளிகளை மட்டுமல்ல, உண்மை நிலைமை எடுத்துக் காட்டுவது போல, 10 3 பள்ளிகளையும் பாதிப்பதுதான். ஒவ்வொரு பள்ளி யிலும் ஏறத்தாழப் பத்து ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள் என்றும், 200 பிள்ளைகள் படிக்கிறார்கள் என்றும் வைத்துக் கொண்டால், இன்றைய நெருக்கடி, கிட்டத்தட்ட 1000 பள்ளிகளையும் 10000 ஆசி ரியர்களையும், இரண்டு இலட்சம் மாணவர்களையும் பாதிக்கிற மிகப் பெரிய பிரச்சினை என்பது வெள்ளிடை மலையென விளக்கமாகும்.

ஆகவே, தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள், பிரச்சினையின் மாபெருந் தன்மையைக் குறைத்து மதிப்பிட்டுத் தப்புக்கணக்குப் போடாமல் உள்ள நிலையை உள்ளபடியே எண்ணிப்பார்த்து, நியாயமான முறை யில் பள்ளிகளுக்கு உதவித் தொகையை அளிக்க முன்வரவேண் டும். **நிர்வாகிகள் சங்கத்தார் எடுத்துக் காட்டியுள்ளபடி ஆசிரி யர்களின் ஊதியம், பள்ளிக்கூட கட்டிட வாடகை, பிற செலவு களுக்காக 30 சத விகித உதவித் தொகை இந்த மூவகை உதவிகளையும் செய்யவேண்டியது அரசாங்கத்தாரின் குறைந்த பட்சக் கடமையாகும்.** இந்தக் கடமையை அவர்கள் நிறைவேற்றி னால்தான், ஆரம்பக் கல்வி விரைந்து வளரும். அதன் தரமும் திற மும் குறையாமல் இருக்கும்.

நற்பணி புரிந்த நல்லாசிரியர்

ஆசிரியர்கள் ஆற்றும் அரும் பணியானது நாட்டின் முன்னேற் றத்திற்கு அடிப்படை போன்றது என்கிற பேருண்மையை அனை வருக்கும் அறிவிப்பதற்காக இந்திய அரசாங்கத்தார் வகுத்துள்ள ஒரு திட்டத்தின்படி, சென்னை மாநில உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் களில் தலை சிறந்த பணிபுரிந்துள்ள தகைசால் அறிஞராக இந்த ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்தாரால் 500 ரூபாய் பரிசும் பாராட்டு இதழும் அளிக்கப்பட்டு, உயர்தனிப்புகழ் எய்தியிருப்பவர் **திருவாளர் ஆ. மு. கன்னியப்ப முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் ஆவர்.**

பொன் விளைந்த களத்தூருக்கு அண்மையிலுள்ள ஆனூர் என் னும் சிற்றூரில் பிறந்து, புதுவை கால்வே கல்லூரிப் பள்ளியிலும்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் கலை பல பயின்று, சைதாப் பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கல்வி பயிற்றுவிக்கும் துறையில் தேர்ச்சி பெற்ற அண்ணல் கன்னியப்பர், தொடக்கத்தில் சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும், 1939 முதல் இன்று வரை காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் அமர்ந்து, கல்வித் துறைக்கு ஆற்றியுள்ள அரும்பணிகள் எண்ணிறந்தன. அந்தப் பணிகளின் சிறப்பும் சீரும் எண்ணி எண்ணி மகிழத் தக்கன. நுண்மாண் நுழைபுலமும், இனிமையும் சுவையும் மிகுந்த முறையில் கல்வியைப் பயிற்றுவிக்கும் பேராற்றலும், அனைவரின் உள்ளத்தையும் தன்பால் ஈர்க்கத்தக்க நற்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற நல்லறிஞராவார் திருவாளர் கன்னியப்பர். நற்புகழ் எய்தியுள்ள நல்லாசிரியர் கன்னியப்பர் அவர்கட்கும், அன்னவரைப் பாராட்டியதன் மூலம் தனக்கு ஓர் பாராட்டைத் தேடிக்கொண்ட இந்திய அரசாங்கத்திற்கும் நம் பாராட்டுதல் உரியது ஆகுக.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளுக்கு

அவசர வேண்டுகோள்

பேரன்புடையீர், வணக்கம். அடுத்த ஆண்டிலிருந்து பிள்ளைகளிடமிருந்து கட்டணம் வசூலித்தல் கூடாதென்றும், 15 அல்லது 20 சத விகிதம் நிர்வாக உதவித் தொகை மட்டுமே தரப்படுமென்றும், தமிழ்நாட்டு அரசாங்கத்தார் அறிவித்துள்ள காரணத்தால், நம் பள்ளிகள், பெரியதோர் நெருக்கடியில் சிக்குண்டு தவிப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த நெருக்கடியிலிருந்து நம் பள்ளிகளை எப்படி மீட்பது என்பதை ஆராய்ந்து அறியவும், பள்ளிகளை நடத்துவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச செலவு எவ்வளவு என்பதை அரசாங்கத்துக்கு அறிவிக்கவும், அந்த அளவு உதவித் தொகையை அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெறவும், நம் பள்ளிகள் பற்றிய உண்மை நிலையை அரசாங்கத்தாருக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கவும் ஏப்ரல் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் சென்னையில் நம் மாநில மாநாட்டைக் கூட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாநாட்டுக்கான ஏற்பாடுகள் ,விரைந்து செய்யப்பட்டு வருகின்றன. மாநாட்டுத் தேதி, இடம் முதலிய விவரங்கள் விரைவில் அறிவிக்கப்

படும். நம்முடைய நியாயமான கோரிக்கைகள் வெற்றி பெற வேண்டுமானுல் நம் பள்ளிகள் பற்றிய உண்மையான புள்ளி விவரங்கள் தெரியவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே தமிழ் நாடு முழுதிலும் உள்ள ஒவ்வோர் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகியும் மாநாட்டில் தவருமல் வந்து கலந்து கொள்வதோடு, உடனடியாகத் தத்தம் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை, பள்ளியின் நிர்வாகத்துக்காக ஆகும் பல்வேறு வகைச் செலவுகள் பற்றிய தெளிவான விவரங்கள், அரசாங்கத்தார் அளிக்கும் உதவித் தொகை பற்றிய விவரங்கள் ஆகிய இந்தப் புள்ளி விவரங்களை, "ஏ. ஆர். சேஷாசலம், செயலாளர், சென்னை மாகாண உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம், 83, தையப்ப முதலி தெரு, சென்னை—1." என்கிற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவேண்டுகிருேம். உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் மாவட்டச் சங்கச் செயலாளர்கள் இந்தத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு, தத்தம் மாவட்டத்தில் உள்ள எல்லாப் பள்ளிகள் பற்றிய விவரங்களையும் திரட்டி அனுப்பினுல் மிகவும் நலம். நாளைக்குப் பார்ப்போம்—பிறகோர் நாள் கவனிக்கலாம் என்றெல்லாம் அசட்டையாக இராமல் உடனடியாகச் செய்து தீரவேண்டிய அவசியமான பணி இது. அன்பு கூர்ந்து புள்ளி விவரங்களை அனுப்பி மாநாட்டின் வெற்றிக்கு வழிகோலுங்கள்.

பி. வீரராகவன், தலைவர்,

ஏ. ஆர். சேஷாசலம், செயலாளர்;

சென்னை மாநில உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் சங்கம்.

சிந்தனைச் சுடர்கள்

வறுமையும் வேதனையும் இளமையில் எளியலாம் செல்வமும் சிறப்பும் முதுமையில் தவழலாம். என்றுலும்கூட இளமைப் பருவமே சிறந்த பருவம். ஏனெனில் அதுவே இன்பத்தை அறியும் எழில்மிகு சகாப்தம்.

—ஜார்ஜ் பர்ரோ.

உலகத்தில் எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. அவை இல்லாமலே நாம் வாழ முடியும். ஆனுல் ஒரு முறை பெற்றுவிட்டாலோ பிறகு அவற்றை இழக்க நமக்கு மனம் வருவதில்லை. இது மனித இயற்கை.

—தாமஸ் ஹாலிபர்டன்.

மாநில மாநாட்டைக் கூட்டுவோம்

உண்மை நிலையை அனைவர்க்கும் அறிவிப்போம்

நிர்வாகிகள் சங்கத்தின் முடிவு

சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 20—3—59 அன்று கூடியபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. 16-3-59 *அன்று சென்னை சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் அவர்கள் உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் எதிர்கால நிலையைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துகளைக் கண்ட பிறகு, உடனடியாகச் சென்னை மாகாண உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளின் மாநாட்டைக் கூட்டி, அரசாங்கத்தின் புதிய உத்தரவால் ஆரம்பக் கல்வியின் தரமும் வளர்ச்சியும் எப்படிச் சீர்குலைந்து சின்னபின்னப்படும் என்பதைப் பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தெள்ளத் தெளிவாக அறிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்று இந்தச் செயற்குழு கருதுகிறது. ஆகவே ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் சென்னையில் மாநில மாநாட்டைக் கூட்டவேண்டுமென்று இந்தக் குழு தீர்மானிக்கிறது.*

2. *மாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு துணைக் குழுவை இந்தச் செயற்குழு ஏற்படுத்துகிறது :—*

1. திரு. கந்தசாமி நாடார்
2. ,, ஜே. முத்துகிருஷ்ணன்
3. ,, ஜகதீசன்
4. ,, வேணுகோபால்
5. ,, டி. ரங்கநாதன்
6. ,, ஏ. கே. எஸ். சர்மா
7. ,, எம். எஸ். சீனிவாசன்
8. ,, பி. வீரராகவன்
   (*தலைவர், சென்னை மாகாண உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்.*)
9. ,, ஏ. ஆர். சேஷாசலம்
   (*செயலாளர், மேற்படி சென்னை மாகாண உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்.*)

தவருன போக்கு

கல்வி இலாகா மான்ய விவாதத்துக்கு ராஜ்ய அஸெம்பிளியில் மந்திரி திரு. சுப்ரமண்யம் அளித்த பதிலில் கவனிக்க வேண்டிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன. (1) ஆரம்பப் பாடசாலைகளில் சம்பள வசூலை நிறுத்தி விடும் ஏற்பாட்டின் விளைவுகள் (2) காலேஜுகளில் ஆசிரிய ஊதியங்களை உயர்த்துவதற்கு ராஜ்ய சர்க்கார் தமது பங்காகிய 25 சதவிதத்தைக் கொடுக்க முடியாதென்று சொல்லி அதற்குக் கொடுத்துள்ள காரணம் (3) பாட புத்தகங்களை சர்க்காரே வெளியிடுவதென்ற முடிவை மீண்டும் உறுதி செய்திருப்பது. இந்த மூன்றையும் "தீர்ந்து போன விவகாரங்கள்" என்று கருதாமல் சர்க்கார் மேலும் பரிசீலனை செய்யவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறோம்.

ஆரம்பப் பாடசாலைகளில் 1 முதல் 5 வகுப்பு வரை சம்பளம் வசூலிக்கலாகாது என்ற ஏற்பாடு அடுத்த ஆண்டின் துவக்கத்திலிருந்து அமுலுக்கு வருகிறது. இதற்கு இணங்கும் எய்டெட் ஸ்கூல்களில் உபாத்திமைச் சம்பளப் பொறுப்பு இது வரை போலவே இனியும் சர்க்காருடையது; இதைத் தருவார்கள். கூட, பள்ளியின் பராமரிப்புக்காக என்று கொடுக்கப்பட்டுவந்த 15 சதவீத மான்யத்தை 20 சதவீதமாக உயர்த்துவதென்று முடிவாகியுள்ளது. சம்பளம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்கள் நீடித்து நடைபெறுவதை சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை; ஆனால் அவற்றிற்குக் "கிராண்டு" கிடையாது என்கிறார்கள். இம்மாதிரி பாதிக்கப்படும் பள்ளிக்கூடங்கள் 293 தான். அவை பெரும்பாலும் சென்னையில்தான் இருக்கின்றன என்கிறார் மந்திரி. எண்ணிக்கையில் இவை மிகச் சொற்பமாக இருக்கலாம். ஆனால் படிக்கும் பையன்களின் எண்ணிக்கை, கல்வி போதனையின் தரம் ஆகிய இரண்டிலுமே சென்னையில் இவை சிறந்து விளங்குகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகைய பள்ளிக்கூடங்கள் நீடித்து நடைபெறச் செய்வதில் சர்க்காருக்கே அக்கறை இருக்க வேண்டும். இவற்றை மூடிவிட நேரிட்டால் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவதற்கு ஆகும் செலவை விட மான்யச் செலவு மிகக் குறைவாகத்தான் இருக்கும். எனவே, பழைய அடிப்படையில் கிராண்டு தர விரும்பாவிட்டாலும், இவை எண்ணிக்கையில் குறைவாக இருப்பதை முன்னிட்டு, புதிய அடிப்படையில் இவற்றிற்கு உதவியளிக்க வழி காண்பதுதான் நியாயம். மாணவர்களிடம் சம்பள வசூலுக்கு ஒரு உச்சவரம்பு விதித்து, மான்ய அடிப்படையில் மாறுதல்களைச் செய்து, சம்பளம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்கள் நல்லபடி நடப்பதற்கு வழி செய்ய

வேண்டும். இது மட்டுமல்ல. இலவசக் கல்வி என்றால் படிப்பும் மட்டம் என்று ஏற்கெனவே இருந்து வரும் நிலைமை பரவலாகி விடாதபடி பெரு முயற்சி செய்து உழைப்பது அவசியம்.

காலேஜுகளில் உபாத்திமைச் சம்பள உயர்வுக்காக ராஜ்ய சர்க்காரின் பங்காகிய 25 சதவீதத்தைத் தர மறுப்பதற்குக் காரணம், அனுமதித்த மாணவ எண்ணிக்கையில் பாதி கூட காலேஜுகளில் இல்லாமலிருப்பதுதான் என்கிறார் மந்திரி. இப்படிச் சகட்டு மேனிக்கு மொத்தமாகப் புள்ளி விவரங்களைக் கொடுப்பதில் பொருளில்லை. நன்றாக நடக்கும் காலேஜுகளில் அநேகமாகக் காலியிடமே இருக்காது. மற்றவைகளில் குறைவாயிருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கக்கூடும். தவிர எந்தக் காலேஜிலும் விஞ்ஞான வகை வகுப்புகளில் காலியே கிடையாது. தவிர, சில காலேஜுகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பின்பற்றும் முறைகளிலுள்ள கோளாறுகளும் போதிய மாணவர்கள் இல்லாததற்குக் காரணமாக இருக்கலாம். போதிய தேவை இல்லாத பகுதிகளிலுள்ள காலேஜுகளுக்கு மாணவர்கள் நிறையக் கிடைக்காமலிருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு காரணம் உண்டு. இரண்டு வருஷ இண்டர் படிப்பை மாற்றியுள்ள புது ஏற்பாட்டின் கீழ் பழைய எண்ணிக்கையை அடைவதற்கு அவகாசம் தேவைப்படலாம்.

மேலும் சர்வகலாசாலையில் பல பாடங்களுக்கு விசேஷத் தகுதி தேவைப்படுவதால் மாணவர்கள் குறைவாகவும் ஆசிரியர்கள் அதிகமாகவும் இருக்கக் கூடிய நிலைமை சகஜம். சமஸ்கிருதம், அரபி, லத்தீன், கிரீக் போன்ற புராதன மொழிகளையும் நவீன அயல்தேச மொழிகளையும், வேறு பிராந்திய மொழிகளையும், தத்துவப் பிரிவு முதலியவற்றையும் நாடும் மாணவர் குறைவாகத் தான் இருப்பர். இவை விஷயமாக ஆசிரிய—மாணவ விதாச்சாரம் என்பதை எதிர்பார்க்கலாகாது. எனவே இதைக் காரணமாகக் காட்டித் தமது பங்கைச் செலுத்த சென்னை சர்க்கார் மறுக்க முற்படுவது அநாகரிகமான, நியாயமற்ற செய்கை.

பாட புத்தக விஷயத்தை எடுத்துக் கொள்வோம். சர்க்காரே இவற்றை வெளியிடுவது என்பது மாற்ற இயலாத முடிவு என்கிறார் மந்திரி. இதற்காகத் தனி அச்சாலயம் வைக்கப் போவதாகவும் இயந்திரங்களுக்குக் கூட 'ஆர்டர்' கொடுத்துவிட்டதாகவும் அவர் கூறுகிறார். தவறான ஒரு முடிவுக்கு இது உதவாக்கரைச் சப்பைக்கட்டு. இது எடுபடாது. அச்சு இயந்திரம் வீணாகிவிடப் போவதில்லை. சர்க்கார் அமைத்துள்ள பிராந்திய அச்சகக் கழகத்துக்கு அவை பயன்படலாம். எஸ் எஸ். எல். ஸி. உப—பாட ஆங்கிலப் பாடபுத்தகம் ஒன்று சமீபத்தில் தவறு மயமாக

இருந்து பரிபவப்பட்ட விஷயம் மக்கள் அறிந்ததே. இதைப் பற்றி மந்திரி செய்த பிரஸ்தாபம் பொறுப்புணர்ச்சியைக் காட்டவில்லை. இந்த முதல் முயற்சியே இவ்வளவு அபத்தம் என்றால் மேலே நடப்பது எவ்வாறு இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். நல்ல தகுதியுள்ள உபாத்தியாயர்களைக் கொண்டு பாட புத்தகங்கள் எழுதப்படும் என்கிறார் மந்திரி. பிரஸ்தாப புத்தகத்தைஎழுதியவருக்குத்தகுதிக் குறைவே இல்லை. நல்ல உயர்ந்த படிப்பாளி. அப்படியிருந்தும் இந்த மன்னிக்க முடியாத பிழைகள் நேர்ந்தது ஏன்? இதைப்பற்றிச் சரிவர விசாரணை நடத்தி, தவறு எங்கே, எவ்வாறு நடந்தது என்பதை வெளிப்படுத்தினால் தான் இனி அவ்வாறெல்லாம் நடக்காமற் பார்த்துக் கொள்ள வழி புலனாகும். இதை மூடி மறைப்பது நியாயமே ஆகாது. சர்க்காரும் புத்தகங்களை வெளியிடட்டும், பிறரும் வெளியிடட்டும்; எவை நல்லவையோ அவற்றை வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை இருந்தால், இந்த முயற்சி பரீட்சார்த்தமாக நடக்கட்டும் என்று சொல்லலாம். ஆனால் ஏகபோக உரிமையை வரித்துக்கொள்வது கொடுமை நிறைந்த, நியாயம் சிறிதுமில்லாத, அவசியமில்லாத, அக்கிரம வழி என்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

—['தினமணி' தலையங்கம் 17-3-59]

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

❋

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

Form of Certificate of Income வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

❋

முக்கிய அறிவிப்பு

Book Post–ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. P. 50 பாரங்களுக்கு 26 n. P. 75 பாரங்களுக்கு 41 n. P. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

சம்பளம் வசூலிக்காத ஆரம்பப் பாடசாலைகளுக்கு 20% நிர்வாக மான்யம்

ஆசிரியர்களின் ஊதியங்களை அரசினரே நேரடியாகத் தருவர்

தற்போது "கட்டணம் வசூலிக்கும்" ஆரம்பப் பள்ளிகள் "கட்டணம் வசூலிக்காத" பள்ளிகளாக மாறியவுடன், அப்பள்ளி ஆசிரியர்களுக்கு சர்க்காரே நேரிடையாகச் சம்பளத்தை வழங்க உத்தேசித்துள்ளதாக மார்ச் 16–ந் தேதி அசெம்பிளியில் கல்வி மந்திரி திரு. சுப்ரமண்யம் தெரிவித்தார்.

பராமரிப்பு மான்யமாக உயர்ந்த பட்சம் 20 சதவிகிதம் வரை அனுமதிக்க முடிவாகியுள்ளதென்றும், மான்ய உயர்வுக்குக் கோரும் சென்னை பள்ளி ஸ்தாபனங்களின் கணக்கு விவரங்கள், கல்வி இலாகா டைரக்டரால் பரிசீலனை செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் உயர்வு தரப்படுமெனவும் மந்திரி தெரிவித்தார். (தற்போது உயர்ந்த பட்சமாக 15 சதவிகிதம் பராமரிப்பு மான்யம் தரப்படுகிறது.) ஜில்லாக்களில், ஜில்லாக் கல்வி அதிகாரிக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் மந்திரி சொன்னார்.

மந்திரி மேலும் சொன்னதாவது :

"இவை ராஜ்யக் கல்வி ஆலோசனைக் கமிட்டியின் சில சிபாரிசுகளாகும். வெள்ளியன்று நடந்த கமிட்டிக் கூட்டத்தில், இலவசக் கல்வியை ராஜ்யத்தில் அமல் செய்வதற்கான சர்க்கார் உத்திரவு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. கட்டணம் வசூலிக்கும் எய்டெட் ஆரம்பப் பள்ளிகள், கட்டணம் வசூலிப்பதைக் கைவிட்டு, சர்க்கார் உதவியை மட்டுமே தொடர்ந்து பெறலாம் என்றும், சம்பளம் வசூலிப்பதைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்பும் பள்ளிகளுக்கு சர்க்கார் மான்ய உதவி தரப்படமாட்டாது எனவும் சர்க்கார் உத்திரவில் கூறப்பட்டுள்ளது. சர்க்கார் உத்திரவை அமல் செய்வதால் பல பள்ளிகளை மூட வேண்டி நேரிடுமென்றும், ஆசிரியர்கள் வேலையிழக்கக்கூடுமெனவும் சர்க்காரிடம் முறையிட்டுக்கொண்டதன்பேரில், கல்வி ஆலோசனைக் கமிட்டி பரிசீலனைக்கு இப்பிரச்னை விடப்பட்டது. ராஜ்யக் கமிட்டி பூரா பிரச்னையையும் ஆராய்ந்து மேற்கண்டவாறு சிபாரிசு செய்துள்ளது" என்றார்.

கல்வி மான்யக் கோரிக்கை விவாதத்திற்கு திரு சுப்ரமண்யம் மேலும் பதிலளிக்கையில், "சர்க்காரின் உத்திரவால் கல்வித் துறையில்

பெரும் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கருத்து நிலவுகிறது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட விஷயம் என்பதை, புள்ளி விவரங்கள் நிரூபிக்கும். ராஜ்யத்தில் 21,703 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் 7676 சர்க்கார் உதவி பெறும் பள்ளிகள். 1033 பள்ளிகள் சர்க்கார் மான்ய உதவியுடன் கட்டணத்தையும் வசூலித்து வருகின்றன. இந்த 1033 பள்ளிகளில், 740 பள்ளிகள் கட்டணம் வசூலிக்காத பள்ளிகளாக மாற விருப்பம் தெரிவித்துள்ளன. மீதமுள்ள 293 பள்ளிகளில் சில சர்க்கார் மான்ய உதவியில்லாமல் கட்டணம் மட்டும் வசூலிக்க விருப்பம் தெரிவித்துள்ளன. மான்யத்தை அதிகரிக்க சில பள்ளிகள் கோரியுள்ளன. சில பள்ளிக்கூடங்கள் பதில் அனுப்பவில்லை" என்றார்.

சென்னையில்தான் பிரச்னை

"சென்னையில்தான் இப் பிரச்னை முக்கியமானதாக இருக்கிறது. நகரில் உள்ள 228 பள்ளிகளில் 188 பள்ளிகள் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாகும். இந்த 188-ல் 38 பள்ளிகள் இலவசக் கல்வி போதனைக்கு இசைந்துள்ளன. சம்பளம் வசூலித்து நடத்த 6 பள்ளிகள் முடிவு தெரிவித்துள்ளன. 58 பள்ளிகள் மான்ய உயர்வு கோரியுள்ளன. 86 பள்ளிக்கூடங்களிலிருந்து பதில் இல்லை. 21703 பள்ளிகளில் 293 பள்ளிகளைத்தான் இப் பிரச்னை பாதிக்கிறது. ஆகவே கல்வித் துறையில் பெரும் நெருக்கடி ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதை மெம்பர்கள் ஊகித்துக்கொள்ளலாம்" என்றார்.

மூடப்படும் பள்ளிகள்

மானேஜ்மெண்டார் பள்ளிகளை மூடுவதால் அப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்த முன்வருகிற தனிப்பட்டோருக்கு அனுமதி வழங்கலாம் என கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. தனிப்பட்டோர் யாரும் முன் வராமல் போனால் நகரில் சென்னைக் கார்ப்பரேஷனும், இதர இடங்களில் நகரசபைகள் அல்லது ஜில்லா போர்டு, அல்லது பஞ்சாயத்துக்கள் புதுப் பள்ளிகளைத் துவக்கவேண்டும். ஆட் குறைப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள், அதே சம்பளத்தில் இப் பள்ளிகளில் நியமிக்கப்பட வேண்டும். சர்க்கார் தரும் சம்பள விகிதத்திற்கு அதிகமாக அச் சம்பளம் இருக்கக் கூடாது. இத் திட்டம் வெற்றியடைய எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் அளவில் கல்வி வசதி அளிக்க முற்படும்போது குறைகள் ஏற்படத்தான் செய்யும். கல்விப் பிரச்னையில் எல்லா சட்டசபை மெம்பர்களும் தீவிர அக்கறை கொள்ளவேண்டியது அவர்க

ளது கடமையாகும். இம் மாதிரி செய்தால் குறைகள் சீக்கிரத்தில் நிவர்த்தியாகும்.

இலவசக் கட்டாயக் கல்வி

அடுத்த ஆண்டில் இலவசக் கட்டாயக் கல்வியைத் துவக்குவதற்கான திட்டம் ஒன்று உருவாகி வருகிறது. 3-வது திட்டகால இறுதிக்குள் இத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத் திட்டம் விரைவில் இறுதியாக்கப்படும். 1 : 35 என்கிற ஆசிரியர் மாணவர் விகிதத்தை இந்த அடிப்படையில் மதிப்பிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாணவர் எண்ணிக்கை குறைவதால் கல்வியின் தரம் உயரும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனல் எல்லோருக்கும் கல்வியளிக்கும் திட்டத்தை இது தாமதப்படுத்தும். இலவசக் கட்டாயக் கல்வித் திட்டத்தினல் சர்க்காருக்கு 10 கோடி ரூபாய் செலவேற்படும் என மதிப்பிடப்படுகிறது. சம்பளக் கமிஷன் சிபாரிசுகளினல் ஆசிரியர் சம்பளம் உயரவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டால் அந்தச் சுமை வேறு அதிகரிக்கும். ஆகவே, மாணவர்-ஆசிரியர் விகிதம் சரியானது என்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்ருர்.

ஆசிரியர் சம்பளம் அதிகரிக்க வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை. ஆனல் நிதி வசதி இடம் தரவில்லை. மற்ற ராஜ்ய ஆசிரியர்களின் சம்பள விகிதத்துடன் ஒப்பிடும்போது, நம் ராஜ்ய சம்பளத் தரம் குறைந்தது என்று சொல்ல முடியாது என்ருர்.

பெண்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்க்க விசேஷ நடவடிக்கை தேவையென்றும் மந்திரி அறிவுறுத்தினர்.

பாட புத்தகங்களை சர்க்காரே பிரசுரிக்கும் திட்டம் கை விடப்படமாட்டாதென்றும், அதற்காக ஒரு தனி அச்சகம் ஏற்படுத்த முடிவு செய்திருப்பதாகவும் மந்திரி அறிவித்தார்.

—'தினமணி'

சிந்தனைச் சுடர்

உன் செருப்பிலே விழுந்த சிறிய கல்லை எடுத்து எறிவது எளிய செயல்தானே! அதுபோலவே எளிய செயல்தான், உன் உள்ளத்திலே விழுந்த தீய எண்ணத்தைத் தூக்கியடிப்பதும்! தூக்கியடி! தயங்காதே!

—எட்வர்ட் கார்பென்டர்.

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

நாடகத்தில் உலவுவோர்

பெரிய மருது சின்ன மருது	...	*சிவகங்கை ஜமீனைச் சேர்ந்தவர்கள்*
முத்துவடுகநாத உடையணத் தேவர்	...	*சிவகங்கை அரசன்*
வேலு நாச்சி	...	*அரசி*
புதுக்கோட்டைத் தொண்டைமான்	...	*புதுக்கோட்டை மன்னன்*
முத்தய்யன்	...	*உண்மைத் தொண்டன்*
முனியம்மா	...	*முத்தய்யன் மனைவி*
கறுத்தான்	...	*தொண்டைமான் கையாள்*
கண்ணம்மா	...	*கறுத்தான் மனைவி*
கர்னல் வெல்ஷ் கர்னல் அக்நியு கர்னல் பிளாக்பர்ன்	...	*வெள்ளைத் தளபதிகள்*
படமாத்தூர் தேவர்	...	*சிவகங்கையின் புதிய அரசன்*

மற்றும்

ஆர்க்காட்டு நவாப், ஹைதர் அலி, குண்டான், குறுணி முதலியோர்

காட்சி 19

காளையார் கோவில்—பாடி வீடு.

(மருது சகோதரர், ஊமைத்துரை, முத்தய்யன், துரைசாமி முதலியோர்.)

துரைசாமி:—*மடையன் !*

பெ. மருது :—*மூர்க்கன்...!*

ஊமைத்துரை :—*முட்டாள் ! என்ன திமிர், அவனுக்கு? கட்ட பொம்மனைக் காட்டிக் கொடுத்தான்; கூலிப் படைகளைக் கும்பினி யாருக்கு ஒத்தாசையாக அனுப்பினான் ; இவை போதாது என்று இப்போது முக்கியமான திருமயம் கோட்டையையும் வெள்ளையரிடம் ஒப்படைத்துவிட்டான் !*

சி. மருது :—அவன் உதவி இல்லையென்றால், நாம் சிறுவயலை இழந்திருக்க மாட்டோம்.

முத்தய்யன் :—சிறுவயலைப்பற்றி நினைக்கும்போதே நெஞ்சம் கலங்குதுங்க. அழகான வீடுகளும், அகன்ற வீதிகளும், அங்கே செழித்து வளர்ந்திருந்த சோலைகளும், அரண்மனைகளும்... அய்யோ...நம் கையாலேயே நெருப்பு வைச்சு அழிச்சுட்டோமே. இந்த துர்ப்பாக்கியமான நிலை நமக்கு வருமுன்னு நினைக்கவே யில்லேங்க. மறுபடியும் அதைப் போல ஒரு அழகான நகரத்தை எந்த ஜென்மத்திலே பார்க்கப் போறோம்.

பெ. மருது :—போகட்டும், முத்தய்யா! நாம் நினைத்தால் அதைப் போன்ற ஆயிரம் ஊர்களைக் கட்டிக்கொள்ள முடியும்.

முத்தய்யன் :—எனக்கென்னவோ ஆத்திரத்தை அடக்க முடியலேங்க..

துரைசாமி :—எனக்குக்கூட ஒரே கோபமா இருக்கு, அப்பா! அந்த புதுக்கோட்டையானையும், எட்டயபுரத்தானையும் முதல்ல ஒழிக்கணும். என்னை அனுப்புங்க, அப்பா! அவனுக இரண்டு பேரையும் கொன்னுட்டு வர்றேன்.

சி. மருது :—வேண்டாமடா, கண்ணு! நீ இரு. நானே போய் வருகிறேன்.

ஊமைத்துரை :—பகைவரின் பாசறைக்குச் செல்கிறீர்கள்; பக்குவமுடன் நடந்துகொள்ளுங்கள்.

சி. மருது :—நான் பார்த்துக்கொள்கிறேன்! முத்தய்யா! குதிரைகளைத் தயார் செய்.

துரைசாமி :—நான்கூட வர்றேம்பா!

பெ. மருது :—அவனையும் அழைத்துச் செல், தம்பி!

முத்தய்யன் :—தம்பி ரொம்பவும் சின்னவருங்க.

சி. மருது :—இருக்கட்டுமே! புலிக்குப் பிறந்தது பூனையாகிவிடாது. துரைசாமி!

துரைசாமி :—என்னப்பா!

சி. மருது :—நீயும் வா! புதுக்கோட்டையனுக்குப் புதியதோர் பாடம் கற்பிப்போம்.

(இருவரும் புறப்படுகின்றனர். ஊமைத் துரையும, பெ. மருதுவும் துரைசாமியின் நெற்றியில் முத்தமிட்டு அனுப்புகின்றனர்.)

ஊமைத்துரை :—நாங்கள் இங்கே போருக்கான வேலைகளைக் கவனித்துக்கொள்கிறோம். நீங்கள் மானங்கெட்ட அந்த மடையர்களுக்கு சரியான பாடம் புகட்டிவிட்டு வாருங்கள்.

(இருவரும் புரவிமீதேறிப் போகின்றனர். பெ மருது அவர்கள் சற்று தொலைவு நடந்து செல்கிறார்.)

— திரை —

காட்சி 20

புதுக்கோட்டை அருகில் ஒரு சாலை.

(சின்ன மருதுவும், அவன் மகன் துரைசாமியும் குதிரை மீதிருந்து இறங்கி, சாமியாரைப் போல வேடமிட்டுக்கொள்கின்றனர்.)

சி. மருது :—கட்டுக் காவல்களை மீறி புதுக்கோட்டையான் அரண்மனைக்குள் நுழைய அற்புதமான வேடம்! எப்படி, சிஷ்யா!

துரைசாமி :—(சீடனைப் போல) அற்புதம் குருஜீ! வேஷம் அற்புதத்திலும் அற்புதம்!!

சி. மருது :—புறப்படலாமா?

துரைசாமி :—தங்கள் சித்தம், சுவாமி!

(இருவரும் சிரித்துக்கொண்டே செல்கின்றனர்.)

— திரை —

காட்சி 21

புதுக்கோட்டை—மன்னன் மனை.

(ஆங்கில உடையில் இருக்கும் கறுத்தானும, தொண்டைமானும். பஞ்சணையில் சாய்ந்துகொண்டிருக்கும் தொண்டைமானுக்கு மயில் விசிறி கொண்டு வீசுகிறான் கறுத்தான்!)

தொண்டைமான் :—*கறுத்தான்...!*

கறுத்தான் :—*வாட், சார்...?*

தொண்டைமான் :—*புலி ஒன்று ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் தன்னை வளர்த்த மனிதனையே கடித்த கதை ஒன்று கேட்டிருக்கிறாயா ?*

கறுத்தான் :—*ஆமாம் !*

தொண்டை :—*அந்த வழிக்கு வந்துவிட்டார்களடா, வெள்ளைக் காரர்கள் !*

கறுத் :—*வாட்...வாட்...?*

தொண்டை :—*கடன்காரப் பயக ! கொஞ்சம் கொஞ்சமாக நாட்டை ஆக்கிரமிச்சுட்டானுக...அன்று 'திருமயம்' கோட்டையை அவர்களுக்கு விடுவதாகச் சொன்னேன். என் பேச்சில் நம்பிக்கை யில்லாமல் கைபெழுத்துப் போடும்படி கட்டாயப்படுத்தினார்கள்...*

கறுத்தான் :—*நீங்க என்ன, சார் ! இதிலே நம்பிக்கை அவநம்பிக்கை இன்னு என்னங்க கிடக்குது. எதுக்கும் எழுத்து மூலம் இருந்திட்டா நல்லது இல்லேங்களா ?*

தொண்டை :—*ஏலே...சும்மா கிடடா ! ஏது, நீயே அவனுகளுக்கு வக்காலத்து வாங்குகிறாய் ? ஓஹோ...பணம் படுத்துதா...?*

கறுத் :—*வாட்...வாட்...?*

தொண்டை :—*அடச் சீ ! என் மனசு வேதனையா கெடக்குது... நீ வேறு 'வாட்டு...வாட்டு'ன்னு என் உயிரை வாட்டுகிறாய் ?*

(நீண்ட அங்கி அணிந்த ஒரு முனிவரும், ஒரு சிறுவனும் வருகின்றனர்...சி. மருதுவும், துரைசாமியும்.)

முனிவர் :—*கெடுவான்...*

துரைசாமி :—*கேடு நினைப்பான் !*

முனிவர் :—*மற்றவர்களை ஒரு காலத்தில் வாட்டியவன்...*

துரைசாமி :—*தானும் ஒரு காலத்தில் வாடுவான் !*

தொண்டை :—*(அதிகாரத்துடன்) யார் நீங்கள் ? வாட்டு வேதாந்திகளுக்கு இங்கு என்ன வேலை...?*

முனிவர் :—(அமர்ந்து) வரட்டு வேதாந்தமல்ல, மகனே! கோணல் புத்தியுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் காணும் உண்மை...

கறுத் :—வாட்...வாட்...?

தொண்டை :—ஏது சாமியாரெல்லாம் வாழ்க்கையைப்பற்றிப் பேச ஆரம்பிச்சுட்டிங்க...

முனிவர் :—மனிதனாக வாழவேண்டியவர்கள் மிருகமாக மாறிவிட்ட போது...சத்தியத்திற்குப் பாடுபடுபவன்கூட சாமியார் வேஷம் போட வேண்டியிருக்கிறது...

கறுத் :—சார்! ஒன்னவோ தெரியல. சிக்கல் முளேக்குது!

தொண்டை :—சிக்கலாவது? செங்கல்லாவது...?ஓய்...நீர் யார்?

துரைசாமி :—யார் என்று சொன்னால் பயந்துவிடமாட்டாயே...?

கறுத் :—ஆஹா! நீ...டா சிங்கம்!

துரைசாமி :—அப்படியானால் அஞ்சாமல் கேள்! மானமற்றவர்களே! மானத்திற்காகப் போராடும் மருதுபாண்டியரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா...?

கறுத் :—(நடுக்கத்துடன்) ஆங்...யாரு...ம...மா...ம...மா...மா...

தொண்டை :—அட, சீ! சும்மா கிட! மாமாவாவது...அத்தை யாவது? ஏய்! பரதேசிகளே! எங்கே வந்தீர்கள்?

முனிவர் :—பரதேசிகளுக்கு நீங்கள் பாதுகாப்பு அளிப்பதாகக் கேள்விப்பட்டு வந்தோம்,

தொண்டை :—எத்தனே! எழுந்திரு, இந்த இடத்தைவிட்டு! புதுக் கோட்டை சமஸ்தானத்தை சோறு போடும் சத்திரம் என்று எண்ணிக்கொண்டாய்?

முனிவர் :—புதுக்கோட்டை மன்னரே ஆங்கிலேயரின் கைப்பாவை யாகிவிட்டார் என்றால், சமஸ்தானம் சத்திரமாவதில் வியப்பு ஒன்றும் இல்லேயே...?

தொண்டை :—திமிர் பிடித்தவனே! ஏதாவது பேசினால் உன் நாக்கை அறுத்துவிடுவேன்.

முனிவர் :—கூர்மையில்லாத கத்தியை வைத்துக்கொண்டு ஏனடா கூத்தாடுகிறாய். ஆர்க்காட்டு நவாபிடம் சொல். அவன் நம்பு வான் உன் வீரத்தை!

கறுத் :—அரசே! இவன் உண்மை சாமியார் அல்ல...யாரோ போலி சாமியார்!

தொண்டை :—விவேகமற்றவனே! உன் வேஷத்தைக் கலைத்துவிட்டு என்னிடம் வார்த்தையாடு, பார்க்கலாம்!

முனிவர் :—புதுக்கோட்டை! உனக்கு சின்ன மருது தெரியுமா?

தொண்டை :—காளையார்கோவில் காட்டுக்குள் பதுங்கிக் கிடக்கும் அந்த சின்னபுத்திக்காரனை நான் தெரிந்துகொள்ளவேண்டாம்.

முனிவர் :—ஏன்? அவனை நினைத்தாலே உடம்பு நடுங்குகிறதோ... கறுத்தானைக் கேள்...அவன் சொல்வான், மருது சகோதரர்களின் மானமுள்ள வாழ்வைப் பற்றி...

கறுத்தான் :—பூ...! வாயை மூடிக்கிட, சாமியாரே! மருது என்றால் பெரிய மலைன்னு நினைச்சுட்டியா? எனக்குத் தெரியும் அவர்களுடைய வண்டவாளம்!

துரைசாமி :—என்ன சொன்னாய்? நன்றி கெட்டவனே!

('பளார்' என்று அறைகிறான். கறுத்தான் அதிர்ச்சி யடைகிறான்.)

முனிவர் :—மருது இப்போது உங்கள் எதிரில் வந்தால் என்ன செய்வீர்கள்?

தொண்டை :—என் வாளால் அவனைத் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்துவேன்.

(வாளை உருவுகிறான். முனிவர் வேடம் கலைகிறது. சின்ன மருது தோற்றமளிக்கிறான். தொண்டைமானின் கை நடுங்குகிறது. கறுத்தான் சிலையாக நிற்கிறான்.)

சி. மருது :—நடுங்க வேண்டாம், நண்பா! உனக்கு நல்ல முறையில் சொல்லிவிட்டுப் போகவே வந்தோம். நீயும் எட்டயபுரத்தானும் ஒத்துழைக்காவிட்டால், எங்கள் சிறுவயல் அரண்மனையைக் கும்பினியாரால் கைப்பற்றியிருக்க முடியாது. இங்கே பார்! உங்களுக்கும் எங்களுக்கும் ஆயிரம் பூசல் இருக்கலாம்; விரோதம் இருக்கலாம். இது நம் குடும்பச் சண்டை! இதில் மற்றவரை நுழையவிடக் கூடாது. எங்கள்மீது உள்ள காழ்ப்பு காரணமாக, வெள்ளையருக்கு உதவுவது, அடுத்தவன் கையைக் கொண்டு நம் கண்ணைக் குத்திக்கொள்வதைப் போலாகும். உன்

போக்கால் நமது நாடு எந்த நிலையடையும் என்பதை எண்ணிப் பார்!

தொண்டை :—அந்தக் கவலை எனக்கில்லை. நீர் வந்த விஷயத்தைச் சொல்லலாம்.

சி. மருது :—நீ வெள்ளையர் துணைகொண்டு எங்களை அழித்துவிடுவாய் என்ற பயத்தால் அல்ல...களங்கமில்லாத் தென்பாண்டி நாட்டு மக்கள் எதிர் காலத்தில் கண்ணீரும் கம்பலையுமாக வாழ் விழந்து தவிக்கக் கூடாது என்ற காரணத்தால், உன்னை ஒன்று கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டை :—என்ன...?

சி. மருது :—இனிமேலாவது பறங்கியருக்கு உணவும் படையும் கொடுத்து உதவாதே! எங்களுக்கும் உன் ஒத்துழைப்பு வேண்டாம். யாருக்குமே உதவாமல் நீ நடுநிலையாக இருக்கவேண்டும்.

தொண்டை :—அது முடியாத காரியம். எனக்கு ஒரு கண் போனாலும் பாதகமில்லை. என் விரோதியின் இரு கண்களும் அழிய வேண்டும்.

சி. மருது :—புதுக்கோட்டையாரே! உன் பரம்பரை வழி வழியாக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இழிசெயலில் இறங்கி, அகற்ற முடியாத பழியைச் சுமந்துகொண்டிருக்கிறது. இந்த அவல நிலை உன்னோடாவது நிற்கட்டும். நீயும் பாவம் செய்து உன் குலத்திற்குக் கொடும்பழி தேடிவைத்துவிடாதே. பிற்காலத்தில், உலவப்போகும் உன் சந்ததியாரை தமிழகத்தின் மத்தியில் தலை குனிய வைத்துவிடாதே. 'புதுக்கோட்டை தொண்டைமானின் வமிசத்தில் வந்தவர்கள்' என்று அவர்கள் வெளியில் சொல்லக் கூட வெட்கப்படும்படியான துர்ப்பாக்கியமான நிலைக்கு அவர்களை ஆளாக்காதே. நீ உன் சொந்த நலனுக்காகச் செய்யும் துரோகச் செயல், பல்லாண்டு பல்லாண்டு காலமாக உன் பரம்பரைமீது அழிக்க முடியாத கறையாகப் படிந்திருக்கும்.

தொண்டை :—சின்ன மருது! போதும், நிறுத்து! மகா யோக்கியனைப் போல பேசுகிறாய். நீங்கள் செய்வது மட்டும் சொந்த நலத்திற்கு இல்லையா? "போரில் நாம் இறந்தாலும் பரவாயில்லை; நம் சந்ததியாராவது 'சுதந்திர வீரர்களான மருது பாண்டியரின் வழித்தோன்றல்கள் நாங்கள்" என்று வாட்டு ஜம்பம் அடித்துக் கொள்ளட்டும் என்ற உள் நோக்கத்தால்தானே நீங்கள் இவ்வளவு துணிச்சலுடன் போரிடுகிறீர்கள்? உன் மனதைத் தொட்டு சொல், மருது! எதிர்காலத்தில், நமது பெயரைச் சொல்லியா

வது நம் மக்கள் செல்வாக்குப் பெற்று வயிறு வளர்க்கட்டும் என்று நீ எண்ணுகிறாய், இல்லையா?

சி. மருது :—சீ, அற்ப புத்தியுடையவனே! நான் மானத்தைப்பற்றிப் பேசுகிறேன். நீ சோற்றைப்பற்றியும் சுகத்தைப்பற்றியும் பேசுகிறாய்.

தொண்டை :—வாழத் தெரிந்தவன், நான்! உங்களைப் போல 'மானம்...மதிப்பு' என்ற சொற்களால் வாழ்க்கையைக் குழப்பிக் கொள்ளும் மடையனல்ல!

சி. மருது :—ஆஹா...அருமையான சித்தாந்தம்! வெளியில் சொல்லாதே...விவேகமுள்ளவர்கள் உன் முகத்தில் காறித் துப்புவார்கள்.

தொண்டை :—சிங்கத்தின் குகைக்குள் நுழைந்ததுமல்லாமல், குறை வேறு கூறுகிறாயா? எங்கே, எடு உன் வாளை...

(தொண்டைமானும், கறுத்தானும் வாட்களை உருவுகின்றனர். சின்ன மருது சிரித்துக் கொண்டே நிற்கிறான். திடீரென்று பெரிய மருது உள்ளே நுழைகிறான். தொண்டைமானை நோக்கி...)

பெ. மருது :—(அலட்சியமாக) உருவிய வாளை போடு தம்பி, உன் உறையில்!

(இருவர் வாட்களும் நழுவிக் கீழே விழுகின்றன.)

புதுக்கோட்டையாருக்குக்கூட வீரம் வந்துவிட்டதே. அதுவும் உடைவாளை உருவும் அளவுக்கு! ஒருவேளை மருதுவின் சேவகன் கறுத்தானின் காற்று உன்மீது பட்டுவிட்டதோ...! என்ன தொண்டைமான் பேசாமல் நிற்கிறாய்?

(கறுத்தான் அருகில் சென்று தட்டிக் கொடுக்கிறான்.)

கறுத்தான்! இனத் துரோகமே உருவான தொண்டைமான் தான் நாங்கள் விரோதியாயிற்றே என்று வாய் திறந்து பேச முடியாத ஊமையாகிவிட்டார். ஒரு காலத்தில் நீ எங்கள் உயிர்த் தோழனாக இருந்தவன்தானே? நீ ஏனடா ஏதும் தெரியாதவனைப் போல நிற்கிறாய்...?

(கறுத்தான் தலை நிமிரவே யில்லை.)

சி. மருது :—என்ன, புதுக்கோட்டை! சற்று நேரத்திற்கு முன்பு சீறி எழுந்தாய்; இப்போது பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டாயே, ஏன்? தன்னந் தனியாக நிற்கும் உன்னைக் கொன்று விடுவோம் என்று அஞ்சுகிறாயா? பயப்படாதே! அவ்வளவு இழிகுணம் எங்களுக்கு இல்லை.

(இருவரும் தலை குனிந்து நடுக்கத்துடன் நிற்கிறார்கள்.)

பெ. மருது :—புதுக்கோட்டையானே! கவனமாகக் கேட்டுக்கொள். கடைசி தடவையாக எச்சரிக்கிறோம். பறங்கியருக்கு நீ மேலும் படை கொடுத்து உதவினால், துரோகச் செயலை நீ தொடர்ந்து செய்துகொண்டே வந்தால்...உன் பரம்பரையை ஒழித்துவிடுவோம்! புதுக்கோட்டையே இருந்த இடம் தெரியாமல் பாழாக்கி விடுவோம். எங்கள் இரும்புக் கரங்களில் தீப்பந்தங்களை ஏந்தி வந்து, தீயவர் வீடு ஒன்றைக் கூட பாக்கி வைக்க மாட்டோம். உங்கள் பண்பாடற்ற நெஞ்சங்களைத் தீய்த்துவிட்டே ஓய்வோம்! ஜாக்கிரதை! சீரான சுதந்திர நாடு...அல்லது சிதைந்து போன சொந்த வீடு...! இதில் எது வேண்டுமோ அதை நீயே தேர்ந்தெடுத்துக்கொள். நாங்கள் வருகிறோம்!

(மாயமாய் மறைகின்றனர், அவர்கள். வியர்த்துக் கொட்டும் உடலுடன் தொண்டைமான் பஞ்சணையில் சாய்கிறான். கறுத்தான் விசிறி எடுத்து அவனுக்கு விசிற, அவன் வெறுப்புடன் விசிறியைப் பிடுங்கி வீசி எறிகிறான். அவன் அடிவயிற்றிலிருந்து நீண்டதோர் நெட்டுயிர்ப்பு வெளிப்படுகிறது. கறுத்தான் விசிறியை எடுத்து தனக்கு விசிறிக்கொள்கிறான்.)

— திரை —

(தொடரும்)

கண் காட்சி

[இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.]

கண்காட்சி! கண்ணுக்கினிய—கருத்துக்கினிய காட்சிகளை ஒழுங்குபெற அமைத்துக் கொண்டு, அவற்றைக் கண்டு களிக்கும் பழக்கம், நாகரிகத்தின் சாடல் ஒரு சிறிதும் படாத காட்டுமிராண்டிக் காலத்தில் இருந்தே உலகெங்கணும் இருந்து வந்திருப்பதைக் காண்கிறோம்! கண்காட்சி காலத்தினால் மிகமிகப் பழைமையானது!

காட்டுமிராண்டிக் காலத்தில், மக்களில் வீரமும் தீரமும் படைத்தோர், நாள்தோறுமோ அல்லது நாட்கணக்கிலோ வேட்டையாடிக் கொண்டுவந்த உயிரினங்களை வரிசையாகப் பரப்பிவைக்க, வலிவற்றோர் அவற்றைப் பார்த்து வியக்க, அவர்கள் வியப்பது கண்டு வேட்டையாடி வந்தோர் மகிழ நடைபெற்ற காட்சி முதற் கண்காட்சி என்னலாம். உணவுக்கான வேட்டைகள் குவியும் போது மக்கள் கூடுவதும், மகிழ்ச்சியால் குதித்தாடுவதும், ஓசையிட்டுப் பாடுவதும், வேட்டையாடுவதற்குக் காரணமாக இருந்த எலும்பு—கல்—மரம் ஆகியவற்றாலான கருவிகளை அடுக்கி வைத்து அழகு பார்ப்பதும், வித விதமான தோலாடைகளையும் தழையுடைகளையும் விதவிதமாக உடுத்திக் கொள்ளுவதும், பூக்கள்—காய்ந்த விதைகள்—விலங்குகளின் பற்கள் நகங்கள் ஆகியவற்றைக் கோர்த்து அணிகலன்களாக அணிந்துகொள்வதும் ஆகிய இவை போன்ற எல்லாவற்றையும் ஒழுங்குசேரக் கொண்டு அழகு பார்த்து மகிழ்வது காட்டுமிராண்டிக் காலத்து மக்களின் கண் காட்சியாகும்.

தன்னையும் தன்னுடைய சூழ்நிலையையும், கண்ணுக்கும்—கருத்துக்கும் இனிய காட்சிப் பொருள்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற பண்பு, மனிதனுக்கு ஒழுங்குபடுத்தும் உணர்வு ஏற்பட்ட மிக மிகத் தொன்மைக் காலந்தொட்டே இருந்து வருகிறது என்று கூறலாம். நாகரிக வளர்ச்சி அந்தப் பண்பின் நோக்கம், ஆற்றல், பல்வேறு திறப்பாடு ஆகியவற்றை விரிவடையச் செய்ய உதவிற்றே யொழிய, நாகரிகமே தான் அந்தப் பண்பை உண்டாக்கிற்று என்று சொல்லுவதற்கில்லை; நாகரிகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே அந்தப் பண்பு மனிதனிடம் ஊற்றெடுக்கத் துவங்கி விட்டது.

மிகப் பழைய காலந்தொட்டே பட்டக்காரர்களும் பாளையக்காரர்களும், சிற்றரசர்களும் பேரரசர்களும் தம்முடைய வெற்றிப் பொருள்கள், விருதுகள், யானைகள், குதிரைகள், தேர்கள், கொடி

கள், படைக்கருவிகள், படை வீரர்கள், மதிப்பிற்குரிய பொருள் கள், மனைவிமார்கள், அமைச்சர் கள், அறிவுரையாளர்கள் ஆகி யோரை யெல்லாம் அணிவகுத் துத் தம்முடன் அழைத்துக் கொண்டு உலாவாக ஊர்சுற்றி வருதலை ஒரு கண்காட்சியாகவே கொண்டிருந்தனர் — கொண்டிருக் கின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் பண்டு தொட்டுக் கொண்டாடப்பெறும் ஒவ்வொருவகைத் திருவிழாவும் ஒவ்வொரு கண்காட்சியாகும். பண்டைத் தமிழகத்தில் கடவு ளர்க் கெடுத்த திருவிழாக்களும், காவிரிப்பூம்பட்டணத்தில் கொண் டாடிய கடலாடுதல் போன்ற விழாக்களும், ஏறு தழுவுதல் போன்ற விழாக்களும் ஒவ்வொரு வகைக் கண்காட்சிகளேயாகும். வடநாட்டில்பண்டைநாளில் நடை முறையில் இருந்துவந்த அசுவத் தைப் பூப்பிரதட்சணம் கொண்டு வருதலும், சுயம்வரம் வைத்தலும் ஆன நிகழ்ச்சிகள் ஒவ்வொரு விதமான கண்காட்சிகளேயாகும். பண்டைக் கிரேக்கத்தில் சந்தைக் கூடமும், கிரேக்கச் சொற்பொழி வாளர்கள் சொற்பொழிவாற்றிய மேடைகளும், திறந்த வெளி நாடக அரங்கமும் அந்த நாளைய கண்காட்சிகளாக இலங்கின. பண் டைக் கிரேக்கர்கள் ஒலிம்பியா வில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடி நடத்திய ஒலிம்பிக் விழாவும் ஒரு பெரிய கண்காட்சி யாக அந்தக்காலத்தில் கருதப் பட்டது. விளையாட்டுப் பந்தயங் கள் நடப்பதும், புலவர்கள் தங் கள் இலக்கியங்களை அரங்கேற்று வதும், வரலாற்றாசிரியர்கள் தாம் எழுதிய வரலாறுகளைப் படித்துக் காண்பிப்பதும், சிற்பிகள் தாம் செதுக்கிய சிற்பங்களைக் காட்சிப் பொருள்களாக வைப்பதும், ஓவியக்காரர்கள் தமது ஓவியங் களைக் காட்டுவதும், பாடகர்கள் பாட்டுப்பாடித் தம்திறனை வெளிப் படுத்துவதும், போர்வீரர்கள் தம் வீர விளையாட்டுகளைக் காட்டு வதும் ஆன இவை போன்றவை கள் அந்த ஒலிம்பிக் கண்காட்சி யின் கூறுபாடுகளாக விளங்கின. ஒவ்வொரு நாட்டிலும் கூடிய— கூடும் சந்தைக் கூட்டங்களெல் லாம் வாணிக நோக்கத்தை உள்ள டக்கிக்கொண்ட ஒவ்வொரு வகைக் கண்காட்சிகளேயாகும். ஒவ்வொருசந்தைக்கூடமும்வாணி கம்செய்வதோடுநின்று விடாமல், வேடிக்கை விளையாட்டு காட்டு மிடமாகவுந்தான் காட்சியளித்து வந்திருக்கிறது. தெருக் கூத்தாடு தல், கழைக்கூத்தாடுதல், பாம் பாட்டுதல், பகல் வேடம் புனைதல், குடக் கூத்தாடுதல், தந்திர வேடிக்கை காட்டுதல், போன்ற வைகள் சந்தைக் கூடத்திலும் பிற இடங்களிலும் காட்டப்பட்டு வந்த கண்காட்சிகளாகும். இப் படிப்பட்டக் காட்சிகள் பிற நாடு களிலும் உண்டு. பிரான்சும், பெல்சியமும் இத்தகைய காட்சி களை மிகவாகக் கொண்டிருந்தன.

மகிழ்ச்சியூட்டும் நோக்கோடு பண்டை நாட்களில் நிலவிவந்த காட்சிகள் நாளடைவில் மகிழ்ச்சி

யூட்டுவதோடு வாணிகத்தைப் பெருக்குவதற்கான கண்காட்சி களாக மாறின. இப்பொழுது உலகெங்கும் நடக்கும் கண்காட்சி கள் மகிழ்ச்சி—வாணிகப் பெருக் கம் ஆகிய இரண்டோடு பயனும் அறிவும் பயக்கவேண்டுமென்ற நோக்கோடு அமைக்கப்பெறுகின் றன.

அகில உலகத் தொடர்பும், அகில உலக வாணிகமும் நாடு களுக்கிடையே ஏற்பட ஏற்பட, வாணிகப் பொருள்களைச் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தக் கண்காட்சிகளை நிறுவவேண்டிய இன்றியமையாமைக்கு ஒவ் வொரு நாடும் வந்துவிட்டது. கண்காட்சியின் கவர்ச்சியால் ஈர்க் கப்படும் மக்களிடையே வாணிகப் பொருள்களை விற்பனை செய் வதும், வாணிகப் பொருள் களுக்கு விளம்பரம் தேடுவதும் உற்பத்தியாளர்க்கு எளிதாக இருப்பதால், அவர்கள் கண் காட்சிகளை ஏற்பாடு செய்ய இந் நாளில் உலகெங்கணும் முயலு கிறார்கள் எந்த ஒரு துறையைப் பற்றிய அறிவைப் பரப்பவும், எந்த ஒரு துறைக்கு விளம்பரந் தேடவும், எந்த ஒரு துறையின் பெருமையை விளக்கவும் இந்தக் காலத்தில் 'கண்காட்சி' பயன்படு வது போல வேறு எந்தப் பற்றுக் கோடும் பயன்படுவதில்லை. எனவேதான் உலக நாடுகளிலெல் லாம் அறிவியல், பொறியியல், கலையியல், மொழியியல், அரசி யல், சமூகவியல், பொருளியல், தொழிலியல் போன்ற பல்வேறு இயல்கள் பற்றிய கண்காட்சிகள் எங்கணும் தோன்றுகின்றன.

காட்சிக்குரிய பல்வேறு அரிய வியத்தகு பொருள்களை ஓரிடத் தில் கண்காட்சிக்கென்று திரட்டி, அவற்றை ஒழுங்குபட வைத்துப் பொது மக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்து பயன்பெறும்படி செய்ய வேண்டும் என்ற முயற்சியில் தோன்றும் கண்காட்சிகளில், வரலாற்றுக் காலத்திற்குள் முதற் காட்சியாகத் தென்படுவது கி.மு. 427-ஆம் ஆண்டில் ஐரோப்பா வில் **சாம்பன்** (Champayne என்ற இடத்தில் வைக்கப்பட்ட கண் காட்சியேயாகும். அதே ஆண் டில் **பிரீ** (Brie) என்ற இடத்தி லும் ஒரு கண்காட்சி நடை பெற்றிருக்கிறது. இந்தச் செய் தியை **சிதோனிய அபோலி னிசிச்** (Sidonuis Appollinasis) என்ற ஆசிரியர் எழுதிய குறிப்பி லிருந்து அறியப்படுகிறது. கி.பி. பத்தாவது நூற்றாண்டில் இங்கி லாந்திலும், வேறு சில ஐரோப் பிய நாடுகளிலும் கண்காட்சிகள் வைத்ததாகச் சிற்சில குறிப்புகளி லிருந்து தெரிய வருகின்றது. கி. பி. பத்தொன்பதாம் நூற் றாண்டில் மகிழ்ச்சிக்குரியனவாக வைக்கப்பட்ட கண்காட்சிகளில் வாணிகப் பெருக்கத்திற்கான வழிவகைகளும் காணப்பட்டன. இப்படி மகிழ்ச்சிக்கும் வாணிகத் துக்கும் ஆன முறையில் அமைக் கப்பட்ட கண்காட்சிகள் பல ஐரோப்பிய நாடுகளில் பல இடங் களிலும் நடைபெற்றன.

ஐரோப்பாவில் நடைபெற்ற கண்காட்சிகளில் நிக்னி நௌகோராட் (Nigni Novgorod) என்ற இடத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றக் கண்காட்சி மிகச் சிறப்பாக இருந்து வந்தது. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் ஆரம்பித்த அந்தக் கண்காட்சி ஆண்டு தோறும் வைக்கப்பட்டு, மிகச் சீரும சிறப்புடன் நடந்து வந்தது. முதல் உலகப் பெரும் போருக்கு முன்னால் ஐரோப்பா—ஆசியா நாடுகளிலிருந்து மட்டும் ஆண்டு தோறும் சுமார் 1 லட்சம் மக்கள் வந்தார்கள் என்றும், சிறுசிறு வியாபாரங்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டால் 37½ கோடி பொன் ரூபிள் நாணயங்கள் அளவிற்கு வியாபாரம் நடைபெற்றது என்றும் சொல்லப்படுகின்றன.

இந்தக் காலத்தில் நடைபெறும் பொதுக் கண்காட்சிகளெல்லாம், 1849-ஆம் ஆண்டில் பாரிசில் நடைபெற்ற கண்காட்சியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவைகளாகும் என்று கூறலாம். சென்ற நூற்றாண்டில் மேலை நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளிலெல்லாம் மிகப் பெரிய கண்காட்சி 1851-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற "பெரிய பிரிட்டன் கண்காட்சி" ஆகும். இதற்கு பாரிச் கண்காட்சிதான் முன்மாதிரியாகும். அந்தக் கண்காட்சியின் முழுப் பெயர் "எல்லா நாடுகளின் பொறித் தொழில் சாமான்களின் பெரிய கண்காட்சி" (Great Exhibition of the works of Industry of all Nations) என்பதாகும். இந்தக் கண்காட்சி இலண்டன்மாநகரில், ஐட் பார்க் (Hyde Park) என்ற பூங்கா வெளியில் வைக்கப்பட்டது. கண்காட்சியை எப்படி அமைக்கலாம் என்பதற்கு 245 பேர்கள் மாதிரிப் படங்கள் வரைந்து காட்டினார்களாம். எந்த ஒரு படமும் தனியாகப் பயன் படவில்லையாம். பல படங்களிலிருந்து மாதிரிகளை எடுத்து ஒன்றாக சேர்த்துப் புதிய மாதிரி ஒன்று கண்டுபிடித்தார்களாம். அரிய கண்காட்சிப் பொருள்களை வைப்பதற்கென்று கிரிச்டல் பாலச் (Crystal Palace) என்ற ஒரு பெரும் மாளிகையை இரும்பினாலும் கண்ணாடியிலும் கட்டிமுடித்தார்கள்.

இந்த மாபெரும் கண்காட்சி நடத்தியதன் மூலம் இலண்டன் மிகப் பெரு வருவாயை அடைந்தது. இந்தக் கண்காட்சியில் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் 13,937 பேரும், பிரிட்டிஷ் பேரரசைச் சேர்ந்தவர்கள் 7381 பேரும் காட்சிப் பொருள்களைக் காட்டினார்கள். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட காட்சிப் பொருள்கள் காட்டப்பட்டன. இதிலிருந்த காட்சிப் பொருள்களின் விலை மதிப்பு சுமார் 30,00,000 பவுனாகும். அதனை மொத்தம் 60,39,195 பார்வையாளர்கள் பார்வையிட்டனராம். இந்தக் கண்காட்சியின் மூலம் கிடைத்த வருவாயைக்கொண்டு தான், சௌத் கென்சிங்டன்

(South Kensington) என்ற இடத்தில் 87 ஏக்கர் நிலம் வாங்கி, அதில் பொருட்காட்சி சாலைகளும், ஆராய்ச்சிக் கூடங்களும், கலைக்கூடங்களும் கட்டினார்களாம் கண்காட்சியின் நிர்வாகிகள்.

இலண்டன் கண்காட்சியைத் தொடர்ந்து பாரிசில் 1878-ஆம் ஆண்டிலும், 1889-ஆம் ஆண்டிலும் இரண்டு பெரிய கண்காட்சிகள் வைக்கப்பட்டன. 1893-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஒரு பெரிய கண்காட்சி திறக்கப்பட்டது. அதைப் போன்றே உலக நாடுகள் பலவற்றிலும் பெரிய பெரிய கண்காட்சிகள் தொடர்ந்து திறக்கப்பட்டன.

இலண்டன் கண் காட்சிக்குப் பிறகு, குறிப்பிடத் தக்கவகையில் அமைந்த மிகப் பெரிய கண்காட்சி 1924-25-ஆம் ஆண்டில் வெம்பிளி (Wembley) என்ற இடத்தில் நடைபெற்ற பிரிட்டிஷ் பேரரசுக் கண்காட்சி (British Empire Exhibition) ஆகும்.

அமெரிக்கா 1933—34-ஆம் ஆண்டில் சிகாகோ நகரில், தனது ஒரு நூற்றாண்டின் அரிய அரசியல்—பொருளியல்—சமூகவியல்—தொழிலியல்—அறிவியல் சாதனைகளைக் கண்காட்சியாக நடத்திக் காட்டிற்று. அந்தக் கண்காட்சி மிக்க வியப்புக்குரிய முறையில் அமைந்திருந்தது இந்த முறையில் அமைந்த கண்காட்சி 1935-ஆம் ஆண்டில் சாண்டியாகோ, பிரேசில் போன்ற இடங்களிலும் திறக்கப்பட்டது. பிறகு டெக்சாச், சான்பிரான்சிச்கோ, பாரிச், நியூயார்க் ஆகிய நகரங்களிலும் தொடர்ந்து வைக்கப்பட்டது. இத்தகைய கண்காட்சி மக்களுக்குப் புதிய எழுச்சியையும், ஊக்கத்தையும் அளித்ததோடு, அறிவியல் துணைகொண்டு புதிது புதிதான பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கும், பொருளுற்பத்தியைப் பெருக்குவதற்கும், வாணிகத்தை விரிவாக்குவதற்கும் பெரிதும் பயன்பட்டது.

இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்ததற்குப் பிறகு நடந்த கண்காட்சிகளிலே மிகப் பெரிய கண்காட்சி 1951-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் நடைபெற்ற "நூற்றாண்டுக் கண்காட்சி"யாகும். அந்தக் கண்காட்சியில் பல்வேறு துறைபற்றிய பொருள் வைக்கப்பட்டு, வரலாறு கூறப்பட்டுச் செய்திகள் விளக்கப்பட்டுப் பயன்கள் கூறப்பட்டிருந்தன. உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் இலட்சக் கணக்கான பார்வையாளர்கள் அந்தக் கண்காட்சியைச் சென்று பார்த்தனர்.

இந்தியத் துணைக்கண்டத்தை வெள்ளையர்கள் ஆண்டுகொண்டிருந்தபோது குறிப்பிடத் தகுந்த கண்காட்சி எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இந்தியா விடுதலை பெற்றபிறகு "இரயில்வே நூற்றாண்டுக் கண்காட்சி'யும் "அஞ்சல் கண்காட்சி"யும் குறிப்பிடத்தக்கவையாகும். 1952-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் நடைபெற்ற "அகில உலகக் கண்

காட்சி" (International Exhibition) மிகச் சிறப்புடன் நடைபெற்ற ஒன்று ஆகும்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்த வரையில் கண்காட்சி இன்னமும் நல்ல முறையில் அமையவில்லை; அது பெற வேண்டிய மதிப்பைப் பெறவில்லை; அது பயன்பட வேண்டிய வகையில் அமையவில்லை. கல்வியறிவில்லாதோர் நூற்றுக்கு எண்பத்தி மூன்று பேர்களாக வாழும் இந்த நாட்டில் கண்காட்சியைப்போல் பயன்படுத்தக்கூடிய வேறு சிறந்த கருவி எதுவும் இல்லை என்று சொல்லலாம். ஆனால் இங்குதான் கண்காட்சி அவ்வளவு அக்கறையோடு நிறுவப்படுவதில்லை. வெறும் பொழுதுபோக்கு 'தமாஷாக்'களுக்கும் மக்கட் கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்காகவுமே இங்கு கண்காட்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. கண்காட்சிகளை அமைப்பதில் இந்தியா மற்ற நாடுகளோடு போட்டி போடத் துணிவு கொள்ளுமேயானால், நல்ல முறையில் அவற்றை நிறுவுவதற்கு வழி வகைகள் பிறக்கும்.

ஒவ்வொரு சிற்றூரிலும், பேரூரிலும், நகரங்களிலும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து பொது மக்கள் காண புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், அரிய பொருள்களையும் காட்சிக்குக் கொண்டு வந்து வைக்ககலாம் என்ற முறையில் ஊக்குவிக்கப்படுவார்களேயானால், மக்களில் சிலருக்காவது புதியன கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவலும், உணர்ச்சியும் ஏற்பட்டு நாட்டில் அறிவியல் அறிவு வளர வழி பிறக்கும்.

குறைந்த அளவு பெரிய பெரிய நகரங்களிலாவது நிலையான கண்காட்சிகள் நிறுவப்பட வேண்டும். படித்தறியாப் பாமர மக்களுக்கு அறிவு புகட்ட அவை ஏதுக்களாக இருக்கும். மேலும் பெரிய நிலவூர்தி (லாரி) களில், நகரும் கண்காட்சிகளை அமைத்துச் சிறிய ஊர்களுக்கு அடிக்கடி கொண்டு செல்வதன் மூலம் மக்களுக்கு உலகியல் அறிவை ஊட்டலாம்.

மனிதனின் அறிவு ஆராய்ச்சித் திறனும், கைத்திறனும், மெய்த்திறனும் உண்டாகும் அரிய பொருள்களையும், அவற்றின் பண்புகளையும் வரலாறுகளையும் கண்காட்சி சாலையில் வைத்து அறிந்து கொள்வதன் மூலம் பெறும் அறிவைக் கொண்டு மேலும் மேலும் நாட்டின் நிலைமையும் மக்களின் வாழ்வையும் உயர்த்தலாம்.

கண்காட்சிக்கு வேண்டிய இன்றியமையாத பண்பு கவர்ச்சியாகும். அந்தக் கவர்ச்சியோடு வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களையும் சேர்த்துக் குழைத்துக் கொடுத்தால், மனித சமூகம் உறுதியாகப் பயன் பெற்றே தீரும். கருத்தும் கவர்ச்சியும் மிக்க கண்காட்சிகள் நாடெங்கும் பொலிவு பெறுமாக.

— பாலு சகோதரர்கள்
கலைக்கூட மலர்

திருச்சி மாவட்ட கிழக்கு, மேற்கு வட்டங்களின் உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

I. மேற்படி சங்கத்தின் சார்பில் 3-1-59 அன்று நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் :

சம்பளம் வசூலிக்காத பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே கிராண்டு தொகையை அரசாங்கம் அளிக்க இருக்கும் பட்சத்தில், பள்ளிக்கூடச் செலவுகளான கட்டட வாடகை, பிராவிடெண்டு பண்டு தொகை, இதர செலவுகள் முதலியவற்றையும் மனமுவந்து அளிக்க முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது. அவ்வாறில்லையெனில் பள்ளிக்கூடங்களை, குறிப்பாக நகரப் பகுதிகளில் நடத்துவது என்பது இயலாத காரியமாகும்.

II. மேற்படி சங்கத்தின் சார்பில் 10-2-59 அன்று நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் :

1. *திருச்சி மாவட்டத்தின் மானேஜர்கள் சங்கமானது கனம் கல்வி மந்திரி அவர்கள் மானேஜர்களைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் குறித்து வருந்துவதோடு, மானேஜ்மெண்டாருடைய நியாயமான கோரிக்கைகளையும் நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.*

2. *மானேஜ்மெண்டார் பள்ளிகளை மூடாமல், தொடர்ந்து நடத்தப் போதிய பண வசதிகளைச் செய்துகொள்ள அரசாங்கத்தின் உத்தரவு தள்ளி வைக்கப்படுதல் வேண்டுமென சங்கம் ஆவலோடு விரும்புகிறது.*

III. மேற்படி சங்கத்தின் சார்பாக 25-2-59 அன்று நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் :

1. *அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்தபடி இதுவரையில் திட்டவட்டமாக ஏதும் பதில் இல்லாத காரணத்தால், மானேஜ்மெண்டுகள் தங்கள் பள்ளிகளின் நிலையினை உத்தேசித்து ஆசிரியர்களுக்கு 3 மாத நோட்டீஸ் கொடுத்து விடுவதென்றும் (நோட்டீஸ் தேதி மானேஜ்மெண்டுகளாலேயே நிர்ணயிக்கப்படும்), அரசாங்கம் சாதகமாக உத்தரவு அளிக்கும் பட்சத்தில் ஏற்கனவே 3-1-59 அன்று மானேஜர்கள் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி அளிக்கப்பட்டிருக்கும் தற்காலிக நோட்டீஸ்களும் மானேஜ்மெண்டுகளால் வாபஸ் பெறப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.*

2. இந்திய அரசியல் திட்டத்தின் கீழ் இலவசக் கல்வி சம்பந்தமாக வகுக்கப்பட்டிருக்கும் 45-வது பிரிவின்படி பிரைவேட் மானேஜ்மெண்டுகள் (1) சம்பளம் வசூலிக்காத பள்ளிகள் என்றும், (2) சம்பளம் வசூலிக்கும் பள்ளிகள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரிவு மேற்குறித்த திட்டத்திற்கு மாறாக இருக்கிறபடியால் எல்லா மானேஜ்மெண்டுகளும், எல்லா உதவி பெறும் பள்ளிகளும் சம்பளம் இல்லாத பள்ளிகளாகவே இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறது.

3. பொது மானேஜ்மெண்டாலேயோ அல்லது தனி நபர் மானேஜ்மெண்டாலேயோ பள்ளிக்கூடம் நடத்தப்படவேண்டுமெனில் கட்டட வாடகை, ஆசிரியர் பிராவிடெண்ட் பண்டுக்கு மானேஜ்மெண்டு அளிக்கும் தொகை, ஆயாமார்கள் சம்பளம் முதலானவை தவிர்க்க முடியாதன. அப்படியிருக்க இவைகளைக் குறித்து அரசாங்க உத்தரவில் ஒன்றும் குறிப்பிடாதிருப்பது ஆச்சரியத்தை மட்டுமின்றி, அதிர்ச்சியையும் தருகிறது. மேற்கண்ட செலவுத் தொகையை மாதாந்திர கிராண்டு அளிக்கும்போதே அதோடு சேர்த்து அனுப்பி உதவி புரியும்படி மானேஜர்கள் சங்கங்கள் ஏற்கெனவே அரசாங்கத்தாரிடம் கேட்டுக்கொண்டுள்ளன.

எனவே, மானேஜ்மெண்டாருக்கு இது விஷயமாக சாதகமான உத்தரவை கூடிய சீக்கிரத்தில் அனுப்புமாறு மீண்டுமொருமுறை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

G. சுந்தரராகவலு நாயுடு,
செயலாளர்,
எயிடெட் மானேஜர்கள் சங்கம்,
திருச்சிராப்பள்ளி.

உதிர்ந்த மலர்கள்

பிச்சைக்காரர்களுக்கு ஈவது மிக்க எரிச்சலைத் தருகிறது. அவர்களுக்கு ஈயாமல் இருத்தலோ அதைவிட மிகுந்த எரிச்சலைத் தருகிறது. ஆகவேதான் கூறுகிறேன். பிச்சைக்காரர்களோ சமுதாயத்தில் இருத்தல் ஆகாது.

— நியேட்சே

உறக்கமே! உனக்கு என் வாழ்த்து! தளர்ச்சியை நீக்கித் தலைவலியைப் போக்கி மனவேதனையை அகற்றி மகிழ்ச்சியை அளிப்பது நீதானே! நீ வாழ்க!

— எட்வர்ட் யங்

:: மலச்சிக்கல் ::

எச். டபிள்யு. வால்மர், எம். டி.

சரியாய் ஒரு புழு நெளிவதைப் போலவே, குடலும் அடிக்கடி கீழ்நோக்கிச் சுருங்கிச் சுருங்கி வந்து, மலத்தைத் தள்ளும். சாப்பாட்டுக் காலங்களில் அது இன்னும் வேகமாக நெளியும். நாம் ஒழுங்காகக் குறித்த வேளைகளில் சாப்பிடுவது மிகவும் அவசியம். அப்படிச் செய்யாமல், இன்று பகல் பன்னிரண்டு மணிக்கும், காலை இரண்டு மணிக்கும், மறுநாள் ஆறு மணிக்கும் சாப்பிட்டால், குடலின் செய்கைகள் பேதப்படும். பலருக்கு மலம் கட்டுப்படுவதற்கு இதுவே காரணம். மற்றக் காரணங்களாவன :

1. போதுமான ஆகாரம் சாப்பிடாதிருத்தல். சர்க்கரை முதலிய மிகவும் தூய்மை செய்யப்பட்ட பொருட்களை அதிகமாக உபயோகித்தல்.

2. மிதமிஞ்சி திரவ உணவு சாப்பிடுதல். கீரை முதலிய பருமையான உணவுகளைப் போதிய அளவு சேர்த்துக் கொள்ளாதிருத்தல்.

3. சாப்பாட்டு வேளைகளுக்கு இடையில் போதுமான தண்ணீர் குடியாமை.

4. விரைவாகப் போசனம் உண்ணுதல்.

5. நீண்ட காலமாகத் தொடரும் கவலை, துயரம், அச்சம், சினம் போன்ற உணர்ச்சிக் கலக்கங்கள்.

6. வேகங்களை அடக்குதல்.

பொதுவாக, தினசரி ஒரு தடவை வயிறு போவது போதும். ஆனால் அப்போது மலம் சுகமாகப் பிரியவேண்டும். அது காய்ந்து இறுகியிருந்தால், அதை மலச்சிக்கலாகக் கருதவேண்டும். சிலருக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை கழிந்தாலும், அதனால் அவர்களுக்கு எவ்விதமான தொந்தரவும் ஏற்படாமல் இருக்கலாம். அவர்கள் அதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம். ஒரு சில அதிருஷ்டசாலிகளுக்கு ஒரு தினத்திலே இரண்டு மூன்று முறை போகும். அவர்கள் எல்லோருக்குமே அப்படித்தான் போக வேண்டும் என்று சொல்லுவார்கள். மருந்து உற்பத்தியாளர்களும் அவ்வாறு விளம்பரம் செய்வார்கள். குடலில் மலச் சிக்கலால் விளையும் தோஷம் உடல் முழுவதும் பரவி, பெரிய விபத்தை உண்டுசெய்யும் என்று அவர்கள் பயம் காட்டுவார்கள். அதை நம்பாதீர்கள். மலம் சரியாக வெளிப்படாவிட்டால், தலைவலி, அசதி முதலிய குறிகள் உண்டாவது உண்மையே. ஆனால் அவை மலத்தின் நஞ்சினால் உண்டாவன அல்ல. பெருங்குடலில் காய்ந்த மலக்

கட்டிகளும் வாயுக் குமிழ்களும் பலமாக அழுத்துவதுதான் மெய்யான காரணம். என் நண்பர் ஒருவர் ஒரு சமயம் ஒரு நோயாளியின் பெருங்குடலிலே கொஞ்சம் பஞ்சை வைத்து அடைத்துப் பரிசோதித்தார். விரைவில் அந்த மனிதனுக்குத் தலைவலி முதலியவை உண்டாயின. பஞ்சை எடுத்ததும், அவை மறைந்து விட்டன.

தளர்ச்சிச் சிக்கல்

மலச்சிக்கலில் இரண்டு வகை உண்டு. ஒன்று குடலின் தளர்ச்சியால் ஏற்படுவது (atonic constipation). குடல் தசை வலு குன்றி, வழக்கப்படி மலத்தைத் தள்ள முடியாது போகிறது. இதற்குப் பொதுவாகக் கீரை முதலிய முரட்டுப் பதார்த்தங்களை அதிகமாகப் புசிக்க வேண்டும்.

வலிப்புச் சிக்கல்

சிலருக்குப் பெருங்குடல் தசையில் அடிக்கடி முறுக்கி முறுக்கி வலிப்பு உண்டாவதால், மலக்கட்டு ஏற்படுகிறது (spastic constipation). இந்த வலிப்பு எப்படி உண்டாகிறது தெரியுமா? சொன்னால் நம்பமாட்டீர்கள். என்றாலும் சொல்லுகிறேன். பெரும்பாலும் பொறாமை, பகைமை, பயம், கோபம், ஆத்திரம் ஆகிய தீய உணர்ச்சிகளால் உண்டாகிறது.

நாள்தோறும் குறித்த காலத்தில் மலம் கழிக்கவேண்டும். வேலைத் தொல்லையாலோ மற்ற எந்தக் காரணங்களாலோ மலம் போவதை அடக்கக் கூடாது. பேதி மருந்துகள் சாப்பிடுவது நல்லதல்ல. முக்கியமாக வலிப்பு மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு அது தீங்கு உண்டுபண்ணலாம். போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். காலையில் எழுந்தவுடனே, இரண்டு தம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு, உடற்பயிற்சியாகிலும், உடல் உழைப்பாகிலும் செய்யலாம். அப்புறம் பகலில் ஐந்து, ஆறு தம்ளர் தண்ணீர் அருந்தவேண்டும். நாம் போதுமான தண்ணீர் குடியாவிட்டால், உடம்பு பெருங்குடலில் உள்ள தண்ணீரை எடுத்து, இருதயம் போன்ற ஜீவாதார உறுப்புகளுக்கு அனுப்பிவிடுகிறது. இதனால் மலம் காய்ந்துபோய் குடலில் தங்கிக்கொள்கிறது. உணவில் பழம், கீரை முதலியவைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்வது அவசியம். காப்பி, தேநீர் குடிக்கக்கூடாது.

—"நல்வழி"

ஏன் ஏற்பட்டது இப்படி?

யார் பொறுப்பு இதற்கு?

'தினமணி' இதழின் கண்டனம்.

எஸ். எஸ். எல். சி., ஆங்கில உப-பாட புத்தக மொன்றைக் குறித்து சென்ற வாரம் ஹைகோர்ட் அளித்த தீர்ப்பு விசேஷ கவனத்திற்குரியது. ஸ்காட் இயற்றிய ஒரு நாவலைச் சுருக்கி எழுதி வெளியிட்டு எஸ். எஸ். எல். சி., பாட புத்தகமாக்கினார்கள். சுருக்கி எழுதியவர் ஒரு காலேஜ் பிரின்சிபால். வெளியிட்டவர் கல்வி இலாகாத் தலைவர். சுமார் ஒரு லட்சம் பிரதிகள் வரை செலவாகும் சர்க்கார் வெளியீடு. எனவே ஆசிரியப் பணியும் பிரசுரமும் முதன்மையாக இருக்க வேண்டும் என்றுதான் பொது மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால், எல்லா வகைகளிலும் இது முழு மோசம் என்று தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார் ஹைகோர்ட் நீதிபதி. பிழைகள் மலிந்து கிடக்கின்றன. நிறுத்தல்-குறிப்புகள், சொற்களின் எழுத்தமைப்பு, இலக்கணம் ஆகிய எல்லா அம்சங்களிலும் குறைபாடுகள் மிகுதி. தவிர, எழுதியிருக்கும் விதம் நல்ல ஆங்கிலத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. ஆங்கிலத்தை எப்படிக் கையாளக்கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதிரி ஏன் ஏற்பட்டது, இதற்கு யார் ஜவாப்தாரி என்ற முழு விவரமும் பொது மக்களுக்குத் தெரிவது அவசியம். கீழ் வகுப்புகளுக்கு வேண்டிய பாட புத்தகங்களை சர்க்கார்தான் வெளியிடலாம் என்று கெடு வைத்து உத்தரவு பிறப்பித்துள்ளார்களல்லவா? அந்தப் பணி இத்தனை அவலட்சணங்களுடன் கூடியதாக இராது என்ற திருப்தி மக்களுக்கு ஏற்பட வேண்டும். இது அலட்சியம் செய்யக்கூடாத அம்சம்.

பிரஸ்தாப ஆசிரியரை இதற்குப் பணித்தது யார்? அவரது கையெழுத்துப் பிரதியைச் சோதித்துச் சரிபார்த்து அங்கீகரித்தது யார்? பாட புத்தகக் கமிட்டி என்ன செய்தது? அதில் யாரார் இருக்கிறார்கள்? இந்தப் புத்தகத்தை இதற்கு முன் சுருக்கி வெளியிட்ட நல்ல பதிப்புக்கள் உண்டா? அப்படியாயின் புதிதாக எழுதச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன நேரிட்டது? இம்மாதிரி நூல்களை எழுதும்படி பணிப்பதற்கு முன்னரும் பிறகும் பின்பற்ற

வேண்டிய நடைமுறை ஏதாவது உண்டா? இதில் யாராருக்கு என்ன அளவில் ஊதியங்கள் கிடைத்துள்ளன? இந்தத் தகவல்களை யெல்லாம் தகுதி யுள்ளவர்களைக்கொண்டு விசாரித்தறிந்து எல்லாத் தகவல்களை யும் வெளியிட சர்க்கார் கடமைப்பட்டவர்கள்.

தெரிந்ததைக் கொண்டுதான் தெரியாததை உலகம் மதிப்பிடும். இப்படியெல்லாம் ஊழல் நிறைந்த வெளியீடுகள் வந்து, படிப்பைக் குட்டிச்சுவராக்கும் என்ற காரணத்தால்தான், புத்தக வெளியீட்டுத் துறையில் சர்க்கார் இறங்கவேண்டாம்; தனிப்பட்ட பிரசுரகர்த்தர் களின் போட்டிக்கு விடுங்கள் என்று விஷயமறிந்தவர்கள் வற்புறுத்தி யுள்ளனர். கேரளத்தில் இத்தகைய வெளியீடுகளில் தெய்வ நிந்தனை யும் கம்யூனிஸ்ட் தன்மையிலுள்ள பிரசாரமும் இருப்பதாகப் புகார் கிளம்பியது. ஒரு கமிட்டியைக் கொண்டு விசாரணை நடத்தி முடிவு களை வெளியிட்டார்கள். அந்த மாதிரி இந்தப் புத்தக விஷயத்திலும் செய்ய வேண்டிய அவசியமிருப்பதாகவே தோன்றுகிறது.

— "தினமணி" (17–2–59 தலையங்கம்.)

★

சமூக நூல்
பயிற்சிப் புத்தகம்

இயற்றியவர் :

T. S. உமாபதி, M. A., L. T., (Dip-in Geog.)

6-ஆம் வகுப்பு	0 10 0
7-ஆம் வகுப்பு	0 10 0
8-ஆம் வகுப்பு	0 10 0

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

GOVERNMENT OF MADRAS

ABSTRACT

EDUCATION – The Madras Teachers Contributory Provident Fund Insurance Pension Rules 1958 – Amendment - Orders issued.

Health, Education and Local Administration Department. G. O. Ms. 2079, Education, dated the 25th November 1958

ORDER:

The following amendments are issued to the Madras Teachers' Contributory Provident Fund Insurance Pension Rulus 1958, issued in G. O. Ms. No. 1109, Education, dated 31st May 1958 :—

(i) For the word 'teacher' wherever it occurs the words 'trained teacher' shall be substituted.

(ii) Under Rule 2 of the rules the following shall be added as a note :

'NOTE : Trained teachers who have been exempted from the operation of Teachers' Provident Fund rules and who subscribe to private funds of the institutions accepted by the Director of Public Instruction will also be eligible for pension subject to other conditions being satisfied.

(iii) Rule 9 and 17 of the rules relating to the Pension scheme be recast at follows :—

"Rule 9 : The age of compulsory retirement shall be 60 years in the case of trained teachers in aided elementary schools and Anglo-Indian Schools, and 55 years in the case of trained teachers employed under Local Bodies, Aided Secondary Schools, Aided Training and Special Schools. In the case of trained teachers under Aided Elementary Schools who are retired at the age of 55 years in accordance with the rules framed by those managements, the age of compulsory retirement shall be 55 years,"

"Rule 17 : The pension found admissible may be sanctioned by the District Educational Officer, the Inspectress of Girls Schools or the Inspector of Anglo-Indian Schools as the case may be in respect of trained teachers employed in their respective jurisdiction after necessary check. On receipt of sanction, together with the connected documents in his office, the Accountant General shall, after due verification and check, issue the Pension Payment order to the person concerned. In

case of delay, the payment of an anticipatory pension may be authorised by the Accountant-General. Cases requiring the grant of any concessions not contemplated in these rules shall be submitted to Government for their orders."

(iv) Under rule (9) the following shall be added as second proviso :

"Provided further that if a trained teacher who on completion of his 55th year prior to 1-4-1955 or 1-4 1958 as the case may be, is continued in service inclusive of or after 1 4-1955 or 1-4-1958 as the case may be in the same school or in any other school without break shall be eligible for pension subject to the condition that service put in by him beyond 60 years will not be reckoned for purpose of Pension."

(2) The Director of Public Instruction is informed that the Government do not accept his proposal to make provision in the rules for condoning deficiencies in qualifying service similar to those in Article 423 of the Madras Pension Code.

(3) This order is issued with the concurrence of the Finance Department. vide their U. N. No. 112446 - Pen - 1, dated 31st October, 1958, and U. O. No. 120807—Pen—1, dated the 12th November 1958.

(BY ORDER OF THE GOVERNOR)

V. KANNAIYAN

Deputy Secretary to Government.

(True Copy)

சிந்தனைச் சுடர்

பண்பாடு வளர்வதற்குப் பலருடைய கூட்டுறவு அவசியம். ஆமாம். ஆனால் கற்பனை வளர்வதற்குத் தனிமைதான் அவசியம்.

— **ஜேம்ஸ் லவல்**

வளர்ச்சியைத் தடுக்கும் தீய சக்திகளை ஒடுக்கும் பொருட்டே புரட்சி புகுகிறது. புரட்சி ஓர் இடத்தில் புகுகிறது எனில், அவ்விடத்தில், வளர்ச்சிக்குக் கேடு சூழும் தீய சக்திகள் தலை விரித்தாடுகின்றன என்றே பொருள்.

— **திரு. வி. க.**

தனிப்பட்ட முறையில் நாம் தோற்றுவிடலாம் - மெய்தான் — ஆனால் நம் உள்ளத்தைக் கவர்ந்த உன்னதமான கொள்கைகள் - அவை என்றும் தோற்கமாட்டா.

— **லாய்ட் காரிசன்**

அபிதான சிந்தாமணி

[சோமு]

அறுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டில் ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது என்றால், அது இன்றுபோல் அவ்வளவு எளிதான காரியம் இல்லை. பத்திரிகைகளும்பதிப்பாளர்களும் வளர்ந்தோங்கி யுள்ள இந்த நாளில், சென்ற நூற்றாண்டின் நிலையைக் கற்பனை செய்து பார்ப்பதுகூடக் கஷ்டந்தான். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், சென்னை பச்சையப்பன் கல்வி நிலையத்தில் தமிழாசிரியராக இருந்த ஒரு முது பெரும் புலவர், தமிழ் நாட்டில் ஒரு பெரிய அற்புதத்தையே நிகழ்த்தினார்.

"என்ஸைக்ளோபீடியா" என்று ஆங்கிலத்தில் வந்துள்ள தொகை நூல்களைப் போலத் தமிழ் மக்களுக்குப் பயன்படக் கூடிய ஓர் அறிவுக் களஞ்சியத்தை எழுதி வெளியிட வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஆ. சிங்காரவேலு முதலியார் என்ற அந்தப் புலவர். வேதப் பொருள் விளக்கம், இதிகாச புராணக் கதைகள், சமய உண்மைகள், வரலாறுகள், நுண்கலைக் குறிப்புகள், வைத்தியம், சோதிடம், பூகோளம், தாவர நூல், பறவை நூல், வான நூல், வேதி நூல், பூத நூல் ஆகியவற்றின் சாரம் என்று, மனிதனுடைய அறிவு சென்ற இடமெல்லாம் புகுந்து தேடித் திரட்டி அத்தனை விஷயங்களையும் ஒன்று சேர்த்து அகர வரிசைப்படுத்தி, ஒரு பெரும் நூலாக வெளியிடவேண்டும் என்பதே முதலியார் அவர்களின் நோக்கம்.

"வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்" அந்த மாபெரும் முயற்சியிலே ஈடுபட்டார் முது பெரும் புலவர். என்ன நேர்ந்தது? இதோ முதலியார் அவர்களே சொல்லுவதைப் பாருங்கள் :—

"சற்றேறக்குறைய 1890-ம் வருஷத்திற்கு முன் தொடங்கினேன்...நான் ஒருவனே பலர் கூடிச் செய்யவேண்டிய இதனை விளையாட்டாகத்தொடங்கினேன். பின்னர் இதனை முடிப்பது எவ்வாறு என்று கவலை மிக்கது. பன்னூல் ஆராயத் தொடங்கி, வேறு பொழுது போக்காகக் கொள்ளாது இதனிடை முயன்று வருந்தினேன். இதனை எழுதப் புகுங்கால் சிலர் வாயிலாகக் கேட்டதை அப்போதைக் கப்போது மறப்பெனும் கள்வன் அவற்றை வஞ்சியாது என் கைப் புத்தகத்தில் முதலில் குறித்துக்கொண்டு, பின்னர் கதையெழுதும் புத்தகத்தில் பதித்து, அவற்றைச் சின்னாள் பொறுத்து அகராதி முறைப் படுத்தி, மீண்டும் பெயர்த்து எழு

கினேன்......இந்நூல் ஒருவாறு முற்றுப் பெற்ற பின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். அவர்கள் "இத்தகைய நூல் தமிழிற்கு இன்றியமையாததே; அதனை வெளியிடுக!" என்றனரே யன்றி, அதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்."

கேட்டீர்களா? முதலியார் அவர்களின் துன்பம் இத்தனை தானா? இல்லை. யார் யாரிடம் எல்லாமோ உதவிக்கு அலைந்தார். ஏமாற்றம் அடைந்தார். எத்தனையோ விதமான ஏமாற்றங்கள், அது ஒரு சோகக் கதை! "அபிதான சிந்தாமணி" என்ற பெயரில் ஆயிரத்து அறுநூறு பக்கங்களில் (இராயல் எட்டுப் பக்கங்கள் லெட் இல்லாமல் சிறு பைகாவில்) 1910-ம் ஆண்டில் முதற் பதிப்பாக வெளிவந்த அந்த அற்புதமான நூலின் முன்னுரையைப் படித்தால் உள்ளம் உருகுகிறது. அவர் பட்ட துயரங்களைப் படிக்கும்போது அத்தனை கஷ்டங்களையும் கடந்து வெற்றியை நிலை காட்டிய அந்தப் பெரியாரை ஒரு கர்ம வீரர் என்றே குறிப்பிடத் தோன்றுகிறது.

ஆம்; "அபிதான சிந்தாமணி" என்ற நூல் வீரத் தமிழ் மகனார் ஒருவருடைய அரும் பெரும் சாதனை. ஒரு தேன் கூட்டுக்குள்ளே எத்தனை பெரிய உழைப்பும் விடா முயற்சியும் அடங்கியிருக்கின்றன என்று எண்ணிப் பாருங்கள். எத்தனை மலர்களிலிருந்து எத்தனை நுட்பமாகப் பொட்டுப் பொட்டாக எடுத்து வந்து சேகரித்த தேன் அதில் இருக்கிறது! மலைச் சிகரங்களின் கொடிகள், பள்ளத்தாக்கிலே உள்ள மரங்கள், அருவிக் கரைகள், ஆற்றங்கரை நந்தவனங்கள், அடர்ந்த பெருங் காடுகள் என எங்கெங்கோ மலர்களைத் தேடிச் சென்ற எத்தனையோ பல ஈக்களின் ஒருமித்த உழைப்பு அல்லவா ஒரு தேன்கூடு! ஆனால் "அபிதான சிந்தாமணி"யோ ஒரே ஒரு முதிய தமிழ்த் தேனீயின் தன்னந் தனியான முயற்சி. எத்தனையோ இடையூறுகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் மத்தியிலே, தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஏகாந்தமான மனிதராக நின்று, தாமும், தமது அறிவும், தம்முடைய தளராத ஊக்கமுமாக உழைத்துச் சாதித்த அமர சாதனை அது!

ஆறுமுக நாவலரின் வாழ்க்கைக் குறிப்பு வேண்டுமா? "ஆ" என்ற வரிசையிலே 143-ம் பக்கத்தைப் புரட்டுங்கள். நவராத்திரங்களின் வகையும் இயல்புகளும் வேண்டுமா? 'இ' என்ற வரிசையில் 171-ம் பக்கத்தைப் பாருங்கள். கடற் குதிரை என்றால் என்ன? இதோ 319-ம் பக்கம் சொல்லுகிறது;—"இது கடலில் வாழும் ஒருவகைப் புழு. ஏறக்குறைய ஏழு எட்டு அங்குல நீளமுள்ளது. இப்புழுவின் தலை மாத்திரம் எல்லா விதத்திலும் குதிரையை ஒத்திருக்கிறது. இதை Tape Fish

என்பர்..." இது மட்டுமா? சேது புராணம் என்ற நூலைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமா? சகர வரிசையிலே பார்க்கவேண்டியதுதான்! ஆழ்வார்கள், நாயன்மார்களின், வரலாறுகள், பண்டைத் தமிழ் அரசர்களின் சரித்திரம், விஞ்ஞான உண்மைகள், உலக அற்புதங்கள், வான நூல்— இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இலக்கிய இலக்கணக் குறிப்புக்கள், சோதிட நுட்பங்கள், துளசி முதலிய மூலிகைகளின் தன்மைகள், புராண வரலாறுகள் இப்படிப்பட்ட செய்திகள் வேறு! இவை யெல்லாம் தவிர, நூலின் அனுபந்தங்களாக வருபவை வேறு! சைவ, வைணவ க்ஷேத்திர மான்மியம் என்று ஒரு பகுதி. இத்தோடு திருநக்ஷத்திரங்களின் அட்டவணை. இவை தவிரத் தொகை அகராதி ஒன்று. இன்னும் பஞ்சாங்கக் குறிப்புக்கள், பஞ்சபட்சி பலன்கள், பட்டப் பெயர்கள் வரிசை, முனிவர்களின் பரம்பரை, அரசர்கள் பரம்பரை, ஆதீனங்களின் வரலாறுகள் – அடடா! எத்தனை மலர்கள் என்று எண்ணி முடியாது! அத்தனை சுவையான தேன்!

அபிதான சிந்தாமணி என்ற இந்த அரிய நூலை ஆக்கித் தந்த ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் வெறும் பாராட்டுக்கு உரிய புலவர் அல்லர். தன்னந் தனியாக நின்று அறிவுக்கு ஓர் ஆலயம் எழுப்பித் தந்த தமிழ்ச் சிற்பி அவர். கோயில் கட்டிய சிற்பிக்குக் கோயிலே எடுத்துக் கும்பிட வேண்டும் என்று தோன்றுகிறது. அப்படிச் செய்யாவிட்டாலும் அந்த நூலை மீண்டும் அச்சிட்டு வழங்கித் தமிழ் மக்கள் ஆதரித்தால் அதுவே அந்த ஆன்மாவுக்குச் செய்யும் அஞ்சலியாகும். அது மட்டுமில்லை. படிப்பவர்களின் அறிவுக்குமே மிகவும் பயன்தரக் கூடிய விருந்தும் மருந்துமாகும் அது.

—'பாரதி"

சிந்தனைச் சுடர்

எந்தத் தத்துவமானால் என்ன? அதனைத் தந்தவர் யாராய் இருந்தாலென்ன? அப்படியே ஒப்புக் கொள்ளாதே. அது ஏன் பொய்யாய் இருக்கக்கூடாது என்ற கேள்வியை எழுப்பி ஆராய்ந்து பார். தயக்கம் வேண்டாம்.

— ஸ்டுவர்ட் மில்

திருப்தியோடு இருப்பவன், கிடைத்ததே போதும் என எண்ணுகிறான். அதிருப்தியோடு இருப்பவனே புதிய பொருள்களைத் தேடியபடி இருக்கிறான். ஆகவே, உலக முன்னேற்றம் முழுவதும் இரண்டாவது சாராரால்தான் ஏற்பட்டிருக்கிறது.

— நதேனியல் ஹாதார்ன்

ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாடு

(டாக்டர் எம். எஸ். வைரண பிள்ளை, M. A. Ph. D.)

உலகின்கண் தோன்றிய மக்களுள் முதலில் தோன்றியவர்கள் என்றும், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முதன்மையாக வாழ்ந்த குடியினர் என்றும் போற்றிப் பாராட்டப் பெற்றவர்கள் தமிழர்கள். அவர்கள் வாழ்ந்த நாடு பன்னெடு நாட்களாகத் தமிழ்நாடு என்றே அழைக்கப்பெற்றது. இந்நிலையில் வாழ்ந்த தமிழ்ப்பெருமக்கள் ஈடும் இணையுமின்றிச் சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய கீழைத்தீவுகளுடனும் உரோமர், கிரேக்கர் முதலிய ஐரோப்பிய நாட்டினருடனும் வணிகத் தொடர்புகொண்டு விளங்கினர் என்பதைத் தமிழ் நூல்களினின்றும் சில மேலைநாட்டு வழிப்போக்கரின் குறிப்புக்களினின்றும் அறிகின்றோம்.

வெளிநாட்டினர் பலரும் தமிழகத்தின்கண் வந்து மங்காப் புகழ்கொண்டு வாழ்ந்தார்கள் — வாழ்கின்றார்கள். இந்நிலையில் தண்டமிழ் நாட்டின்கண் வந்த ஐரோப்பியர்கள் செந்தமிழ் மொழியைக் கற்று ஆய்வுத்திறனுடையராய்த் திகழ்ந்து மொழிக்குச் செய்த தொண்டினையும், அதனடியாக மக்கள் கல்வி வளர்ச்சிக்குச் செய்த பணியினையுமே இக்கட்டுரையில் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

வெளிநாட்டார் நமது நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வந்து, பல இடங்களில் தங்கித் தங்களது வாணிகத் தொழிலை மேற்கொண்டு வாழ முற்பட்டனர். அவர்களுள் பதினாறாம் நூற்றாண்டில் நிரந்தரமான இடம் அமைத்து வாணிகத் தொடர்பு ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் எனக் குறிக்கலாம். வாணிகம்பேணி வந்த ஆங்கிலேயர்கள் தங்களது மதத்தைப் பரப்பவும், அதில் மக்களைச் சேர்க்கவும் முயன்றனர்.

மதக் கருத்துக்களை மக்களுக்குப் போதிக்க வந்த குருமார்கள் தங்கள் கருத்தை நமது தமிழ் மக்களுக்குக் கூற, அவர்கள் தமிழறிந்தாரில்லை. அவர்கள் மொழியில் கூறப்படும் கருத்துக்களை ஏற்கவோ நம்மக்களால் முடியாது. இந்நிலையில், அவர்களுடைய கொள்கை நிறைவேற்றத்திற்கு மொழி தடையாக இருந்ததால், வந்த பாதிரிமார்கள் தமிழ் மொழியினைக் கற்கத் தொடங்கினர். அது காரணமாகத் தமிழ் மொழியிற் சில மாறுதல் —வளர்ச்சி ஏற்படலாயிற்று. சிறப்பாக ஆங்கிலேயர் காலத்தில் தான், தமிழ் மொழியில் அதிகமான உரைநடை நூல்கள் ஏற்படலாயின. அதற்கு முன் அங்

நிலை ஏற்படாமைக்குக் காரணம், மக்கள் தாங்கள் எண்ணிய கருத்தினை ஓலைச் சுவடியிலோ கல்லிலோ பொறித்திடக்கூடியவர்களாக இருந்ததேயாம்.

முதன் முதலாக ஆங்கிலேயர்கள் அலுவலகப் பணிக்கும், ஏனைய செயல்களுக்கும் துணை ஏற்படுத்திக்கொள்ளுவான்வேண்டிச் "சென்னைக் கல்விச் சங்கம்" என்ற ஒன்றை ஏற்படுத்தினார்கள். இச்சங்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பெற்றபோதிலும் இச்சங்கத்தால் தமிழ்மொழி வளர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் அலுவலகங்களில் பணி புரிபவர்கள் தமிழ் கற்றுக் கொள்ளவே பயன்பட்டது. என்றாலும் பாதிரிமார்களே நம் தமிழைக் கற்று அதன் வளர்ச்சிக்கும்—மாறுபாட்டுக்கும் காரணமாக விளங்கினார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் குழப்பம் நீங்கி அமைதியான ஆட்சியை உண்டாக்கிக்கொண்ட ஆங்கிலேயர்கள், நமது நாட்டு மக்களின் கல்வியில் கருத்தைச் செலுத்தி—"கண்ணுடையரென்போர் கற்றோர்" எனப் பொய்யாமொழியார் புகன்றுள்ளபடி மக்களைக் கண்ணுடையவர்களாக்க எண்ணி நாட்டின் பல பகுதிகளிலும் பள்ளிக்கூடங்கள் நிறுவினர். சில அரசாங்கத்தாரால், பல பாதிரிமார்களால், மற்றும் சில தனிப்பட்ட மனிதர்களால் நிறுவப்பட்டன. இவற்றுள் பின்னுள்ள இரண்டும் அரசாங்க உதவி பெற்றே நாட்டில் கல்விப் பணி புரிந்து வந்தன.

இக்காலத்தில் உரைநடை நூலின் இன்றியமையாமையை உணர்ந்து பல உரைநடை நூல்களை எழுதத் தொடங்கினர். அதோடு ஐரோப்பிய முறையில், இலக்கியம், நில நூல், சரித்திரம் முதலியவற்றை உரைநடையில் ஆக்க முற்பட்டனர். படிப்போருக்குப் பண்டை வழக்கப்படி "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" இன்றித் தனித்த உரைநடை நூல்கள் தோன்றலாயின. எழுதப்பெற்ற நூல்கள் எழுதிய சிலருக்கேயன்றிப் பிறருக்கும் பயன்படும் வகையில் ஆங்கிலேயர்கள் தங்களது நாட்டினின்றும் அச்சுப் பொறியைக் கொண்டுவந்து அச்சிட்டு, அனைவரும் அந்நூல்களின் பயனைப் பெறுமாறு துணை செய்தார்கள். ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப் பெற்ற "சென்னைக் கல்விச் சங்கம்" ஏற்படுத்திய பரிசுகளின் காரணமாக வரலாற்று நூல்களும் வெளிவந்தன. அதோடு உரைநடை இலக்கண நூல்களும் தோன்றின. இந்நூற்றாண்டின் இறுதியில்தான் செய்தித் தாள்கள் — நாள்வெளியீடுகள், வார வெளியீடுகள் நாட்டில் நடமாடலாயின.

இவ்வாறு அச்சுப் புத்தகம் நாட்டில் நடமாடத் தொடங்கு முன்னர், மக்கள் ஓலையில் எழுதியும், செவிவழி கேட்டும் தங்க

ளந்து கல்வியறிவை வளர்த்து வந்தனர். ஆனால் பின்னர் ஆங்கிலேயர்கள் நம் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்று, எழுத்தறிந்து, தம் நாடு சென்று தமிழில் அச்செழுத்தை உண்டாக்கித் தமிழ் எழுத்தாலான புத்தகங்களை முதல் முதலில் நம் மக்கள் காணத் துணை செய்தார்கள். அதிலும், அலைபாடிக் கலைவளாக்கும் அழகு நகராம் தரங்கம்பாடியில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டேனிஷ்மிஷன் தலைவர் ஸிகன்பால்கு அய்யர் அவர்கள் உள்ளத்தெழுந்த எண்ணமே நமக்கு அச்சுக் கலையைத் தந்தது. அன்னார் தமிழ்த் தொண்டு போற்றற்குரிய தொன்றே.

பழந்தமிழ் இலக்கியங்களில், விஞ்ஞானக் கருத்துக்களும், நில நூல் கருத்துக்களும், பிறவும் காணப்படினும், அவற்றை எளிய முறையில் அனைவருக்கும் ஏற்ப ஆக்கியருளிய பெருமையான காலம், ஆங்கிலேயர் வாழ்ந்த காலந்தான் என்றால் எவரும் மறுக்கமாட்டார்கள். கணித நூல், வான நூல் முதலியனவும் தமிழில், தமிழ் மக்களிடம் மிகுதியாக உண்டு. அவற்றை ஒரு சிலரே உணர முடிந்தது — உணர்ந்திருந்தார்கள். ஆனால் இன்று ஆங்கிலேயர்களால் எளிதாக எவரும் அறிந்துகொள்ளும் வகையில் அந்நூல்கள் ஆக்கப்பெற்றுள்ளன. இது ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்ட பெரு நன்மைகளுள் ஒன்றேயாம்.

தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் பல்வேறு மூட நம்பிக்கைகளில் தங்களுடைய எண்ணத்தைச் செலவிட்டதோடு காரணமின்றிப் பிரிந்து வாழ்ந்தும், பகுத்தறிவற்ற நிலையில், ஒன்றுபட்டு வாழாது பிறருக்கு அடிமையாக வாழ்ந்தும் அது காரணமாகப் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலை, அரசியலில் தாழ்ந்த நிலை அன்றாட வாழ்விலும்கூடத் தந்நம்பிக்கையின்றித் தம்மைத் தாமே தாழ்த்திக்கொண்டு மக்கள் வாழ்ந்தார்கள். இந்த நிலைமை இன்று மாறி இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? சமுதாயம் என்றால் என்ன? அதன் அமைப்பில் நாம் யார்? அதில் உண்டாகும் மாறுபாடு எதனைச் செய்யும்? என்பன போன்ற கருத்துக்களை உணர்ந்து வாழ்ந்த நாம், இடைக்காலத்து அவற்றை மறந்தோம்; வள்ளுவர் வாக்கை மறந்தோம். எனினும், ஆங்கிலேயர் காலத்தில் அவர்களுடைய சொல் —செயல்— கலந்து பழகும் முறை இவற்றைக் கண்ட பின்னரே நமது திருவள்ளுவரால் கூறப்பெற்ற சமுதாயம் எப்படி இருந்தது என்பதையும் அரசியல் எப்படி இருந்தது என்பதையும் பொருளாதாரத்தில் நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் உணர முற்பட்டிருக்கிறோம்.

திருவள்ளுவரின் வாக்குப்படி "நயத்தக்க நாகரிகமே" வேண்டுபவராக நாம் சமுதாயத்தில் பழக வேண்டும். அவ்வாறு பழகும் முறை நம்மிடம் இருப்பினும்,

அதனை மறந்தோம்; இன்று அதனை வுக்குக் கொண்டுவரவேண்டும்.

பொருளாதார நிலையினை ஆராய முற்பட்டால் நம்மிடம் காணும் குறைபாட்டினை நாம் இன்னும் போக்கிக்கொள்ள முற்படவேண்டும். வருவாய்க்குத் தக்க செலவு செய்தல், மிகுதியும் செலவிட்டு வருந்துகின்ற நிலை இவற்றையெல்லாம் நமது பொது மறையிலிருந்து ஆங்கிலேயர் அறிந்து கடைப்பிடித்து வருகின்றனர். செந்நாப் போதார், "நமக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் கவலை இல்லை. ஆனால் செலவு அந்த வருவாய்க்கு மேல் போகலாகாது" என்ற கருத்தை மிக அழகாக ஆங்கிலேயர் காலத்துக்கு முன்னரே கூறிப் போந்தார்.

"ஆமா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை."

என்ற நிலையில் நாம் பொருளாதாரத்தில் செம்மையுடன் வாழ நமக்கு வழிகாட்டியவர்கள் பலராவர்.

அரசியலில் மக்கள் நலங்கேட்டு அவர்களுக்காக வாழ்பவனே அரசன்—அரசாட்சி ஆகும். அந்நிலை உணர்ந்த அரசே சிறப்புடனிருக்கும் என்ற நிலைமையை உணர்ந்து நடக்க வழிகாட்டியவர் வள்ளுவரானாலும் அதனை நாம் கண்கூடாகக் கண்டு உணரச் செய்தவர்கள், ஜனநாயகத்திற்குத் தங்களுடைய பிற்கால ஆட்சியின் போதாவது மதிப்புக் கொடுத்து நடந்து காட்டியவர்கள் ஆங்கிலேயர்கள்.

மொழி

மிகப் பெரிய ஒரு நாடும் தனது மொழியில், இலக்கியத்தில், கலையில், பண்பாட்டில் கவனம் கொள்ளாமல் இருக்குமேயானால் அந்நாடு மிக விரைவில் தாழ்ந்து தன் நிலையில் கெடும் என்பதை ஆங்கிலப் பெருமக்கள் வாக்கிலிருந்தும், நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், "இமயமலைபோல் உயர்ந்த ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்" என்று கூறிய மொழியிலிருந்தும் அறிகிறோம். ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியில் நீங்காப் பற்றும் பிறமொழிகளை விரும்பிப் படிக்கும் பண்பும் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

அம்முறையிலேயே நம் தமிழ் நாட்டின்கண் மதத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்கள் தமிழ் மொழியை விரும்பிப் படித்து அதிலுள்ள சுவையை உணர்ந்து அதனிடத்து நீங்காத பற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள்; அதோடு அம்மொழியின் சிறப்பையும் அதில் காணும் இலக்கியத்தின் உண்மைப் பொருளையும் இலக்கணத் திறனையும் உலகறியச் செய்தார்கள். அத்தகைய ஆங்கிலப் பெருமக்களுள் குறிப்பாகவும் சிறப்பாகவும் கொள்ளத்தக்கவர்களையும், அவர்கள் செய்த

தமிழ்த் தொண்டினையும் அறிந்து கொள்ளுதல் நலம்.

வீரமா முனிவர் தேம்பாவணி என்ற சிறந்த இலக்கியத்தைத் தந்தவர். கால்டுவெல் என்ற பெரியார் மொழிபற்றிய இலக்கணத்தைத் தெளிவுபடக் கூறிப் பிற மொழியாளரும் தமிழின் சிறப்பை உணரச் செய்தவராவார்.

டாக்டர் போப் ஐயர் அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பிற்காலத்தில் பாரதியார் கூறிய வாக்குப்படி வள்ளுவனை உலகுக்குக் காட்டினார் என்பது மிகையாகாது. அண்மைக் காலத்து வாழ்ந்த ஹீராஸ் பாதிரியார் திராவிட நாகரிகத்தின் சிறப்பை உணர்ந்து தம் உள்ளத் தெளிவால் கூறிய வாக்கியமே அவர் தமிழ் மக்களிடமும், நாட்டிடமும் காட்டும் பெரும் பற்றைக் காட்டும். தம்மை ஸ்பெயின் நாட்டினின்றும் வந்த திராவிடன் எனக் கூறிப் பெருமை கொண்டநிலையே அவரது அன்புடைமையை விளக்கும்.

இதுகாறும் கூறியவற்றால் ஆங்கிலேயர்கள் தங்கள் காலத்தில் அச்சுப் பொறி கொணர்ந்தும், கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டும் மொழி வளர்ச்சியில் கருத்துக் கொண்டும் ஆங்கில நூல் சிலவற்றைத் தமிழில் ஆக்கியும், தமிழ் நூல் சிலவற்றை உலக மொழிகளில் பெயர்த்தும், தமிழர்களின் கலை நாகரிகம் பண்பாடு இலக்கண இலக்கியம் ஆகியவற்றின் உயர்வை உலக மக்கள் உணரச் செய்த செய்கைதான் அவர்கள் தமிழ் நாட்டுக்கும் மொழிக்கும் செய்த பெரும் செயலாகும்.

—[மதுரைத் தமிழ்ச்சங்கப் 'பொன்விழா மலர் 1956]

சிந்தனைச் சுடர்

"ஆகா! அந்தக் காலத்தில் நான் எப்படி வாழ்ந்து வந்தேன் தெரியுமா?" என்று ஒருவன் பேசத் தொடங்கிவிட்டானா? அப்படியானால் அவன் வேலையிலிருந்து ஓய்வு பெற வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பொருள்.

— டிஸ்ரேலி

முதுமை-இதுதான் மனிதனுக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய கொடுமை. பிற கொடுமைகளெல்லாம் நாளாக ஆக மறைந்து விடும். ஆனால் இதுவோ நாளாக ஆக ஓங்கி வளர்கிறது.

— ஜார்ஜ் ஜேம்ஸ்

சிறுகதை :

அறுந்த சங்கிலி

ராமலிங்கம், M. A.

கப்பல்போல் மிதந்து வந்த கார், பங்களாவின் காம்பவுண்டிற்குள் திரும்பிப் போர்டிகோவில் நின்றது. உடனே டிரைவர் இறங்கிக் காரின் கதவைத் திறக்க, இராமாமிர்தம் ஐயர் காரிலிருந்த பொட்டளத்தை எடுத்துக் கொண்டு இறங்கி, "முனுசாமி காரை நன்னு துடைச்சி நாளைக்குத் திருத்தணிக்குப் போவதற்குத் தயார் செய்து வை—காலையிலே 10 மணிக்கு வந்து சேரு" என்று சொல்லிக்கொண்டே ஹாலில் நுழைந்தார். முனுசாமி காரை ஷெட்டில் விடப் போய் விட்டான். ஹாலில் யாரும் இல்லாததால், ஐயர் "அலமு... அலமு......என்னடி செய்திண்டிருக்கே? இங்கே வா...எங்கே இந்த வாண்டுப் பயலேயும் காணோம்...டேய் சுந்துமணி" என்று கூப்பிட்டார். அலமேலு அம்மாள் உடல் வளப்பத்தின் காரணத்தால் ஓடிவர முடியவில்லை, என்றாலும், தத்தி நடக்கும் தன் பேரனோடு ஒருவாறு அசைந்துவந்து "என்ன சமாசாரம்...இதென்ன பொட்டளம்" என்று கேட்டாள். இராமாமிர்தம், சாவகாசமாக மேல் அங்கவஸ்திரத்தை மற்றொரு சோபாவின்மேல் போட்டுக்கொண்டே "நம்ம மந்திரி இன்றைக்கு ஓட்டல் திறந்தாரே தெரியுமோ! அந்த ஓட்டல் ஸ்வீட்சு ரொம்ப நன்னாயிருக்குடி...டேய் சுந்துமணி இங்கே வாடா...நோக்கு ஜாங்கிரி வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஜாங்கிரியை எடுத்துக் கொடுத்துவிட்டு, மிகுதி பொட்டளத்தை அம்மாவிடம் கொடுத்துவிட்டார். சுந்துமணி அதைச் சுவைத்துக் கொண்டே வாசல் பக்கம் பார்த்துக் கை காட்டி "பாம்... பாம்" என்று மழலை மொழி பேசினான். அலமேலு திரும்பிப் பார்த்து "அட நம்ம முனுசாமி வந்திருக்கான்; அதைச் சொல்றான்...முனுசாமி, ஜாக்கிரதையாய் திருத்தணி போய்விட்டு வாங்கோ! நான் உன் பெண்டாட்டி அலங்காரம் கிட்டே சொல்லியிருக்கேன், அவளை மூன்று நாளைக்கு இங்கேயே படுத்துக்கொள்ள" என்றாள். அதற்கு முனுசாமி "சரிங்கம்மா, நல்லது. நான் கவனிச்சுக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு நகரும்போது, "என்னங்க அருணாசல முதலியார் இருக்காரே, அவர் நாளைக்கு வடிவுடை அம்மன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்போகிறாராம். உங்களைக் கட்டாயம் வரச் சொன்னார்" என்று ஐயர் அம்

மாள் சொல்ல, ஐயர், தன்னை நாளைக் காலையிலேயே வரச் சொல்லுவாரோ என்று திரும்பி ஞன் முனுசாமி.

இதுவரை பாதி ஜாங்கிரியை ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்த சுந்துமணி திடீரென்று ஹாலின் கதவண்டை ஓடி "தாயி... தாயி..." என்று கத்தினுன். எல்லோரும் திரும்பிப் பார்க்க, ஐயர் சிரித்துக்கொண்டே "ஏது? இவன் பெரிய சிக்னலர் போலிருக்கே! ஆள் வருவதற்கு முன்பாகவே இவன் கத்திட்ருனே......யாரு அலங்காரம் வாராளா" என்றதும் "ஆமாங்க சாமி" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள். உடனே சுந்துமணி அவளிடம் ஓடி அவள் மடியைக் காட்டி "த்ச...த்ச..." என்று சப்புக் கொட்டினுன். தினமும் தான் வாங்கிவரும் சீப்பான பிஸ்கட்டை யாருக்கும் தெரியாமல் அவனுக்குக் கொடுக்கும் பழக்கம்; இன்று அவன் கேட்டான். இதைத் தெரிந்துகொண்ட அவள், ஒன்றும் கண்டுகொள்ளாமல் "என்னடா வேண்டும் நாம் காரிலே போலாமா" என்று சமாதானம் செய்ய அவன் ஓவென்று கத்தி அவள் மடியைக் காண்பித்து அழுதான். "என்னடி வச்சிருக்கே மடியிலே—அவனுக்குத் தான் காட்டேன்" என்று அலமேலு அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சுந்துமணி வேகமாக அவள் மடியைப் பிடித்திழுக்கவே, தொப்பென்று விழுந்தது ஒரு அறுந்த சைக்கில் சங்கிலியும் ஒரு பொட்டளமும். "ஹை..." என்று 'சுந்துமணி' கையைத் தட்டி அந்தப் பொட்டளத்தை எடுத்துக்கொண்டான். ஐயர் "என்னடி இது அறுந்த சங்கிலி ஏது? தெருவிலே இருக்கிற ஒரு தும்பு தூசியைக்கூட விடமாட்டே போலிருக்கே! முனுசாமி நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! பார்த்தியோ அறுந்த சங்கிலி எதுக்காவது உபயோகப்படுமன்னு கொண்டு வந்திருக்கா" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார். அவர் சிரிப்பு அவன் உள்ளத்தைக் கிளறிவிட்டது. எத்தனை தடவை சொல்லியும் இந்தப் பழக்கத்தை இவள் விடமாட்டேங்கிருளே என்று நினைத்துக் கொண்டே சிறிது கோபத்துடன் ஷெட் நோக்கி நடந்தான். அலங்காரம் முகத்தில் அசடு வழிய அந்தச் சங்கிலியோடு வீட்டினுள் நுழைந்தாள்.

* * *

காரைக் கழுவிவிட்டு, சில கருவிகளை எடுத்து வைத்துவிட்டு ஷெட்டைப் பூட்டி, முனுசாமி வீட்டிற்குப் போகும்போது பங்களாவில் மணி ஒன்பது அடிக்கும் சப்தம் கேட்டது. தன் பெண்டாட்டி இப்படிக் கண்ட பொருள் எல்லாம் எடுத்து வந்து சேர்க்கும் பழக்கத்தை ஒழித்து விடவேண்டும் என்ற எண்ணத்துடன், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே வீட்டை நெருங்க, வெளியிலேயே கதவின் மேல்

சாய்ந்தபடி செப்புச் சிலைபோல் ஏக்கத்தோடு நின்றுகொண்டிருந்தாள் அவள்.

"என்ன அலங்காரம் எனக்காகவா, காத்துக்கொண்டிருக்கே, நீ சாப்பிடக் கூடாது" என்று முனுசாமி கேட்டான்.

"இல்லிங்கோ மச்சான், இன்னும் என் தங்கச்சி வரலே! சாதாரணமா ஏழுக்கெல்லாம் வந்திடுவா; மணி ஒன்பதாச்சு" என்று பெருமூச்சோடு அலங்காரம் சொல்ல 'சிங்காரிதானே, அவ எசமான்தான் நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யப்போகிறாரே, ஏதாவது வேலையிருக்கும்' என்று சொல்லிக்கொண்டே படிக்கட்டு ஏறினான். "என்னங்க மச்சான்! நாளைக்கு அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் என்றால் இன்றைக்கு வீட்டில் என்ன இருக்கு. போய்ப் பார்த்துவிட்டு வாங்க மச்சான்" என்றாள். அவன் சிறிது கோபமடைந்து "அதுக்குத்தான் ஆயிரம் தடவை சொல்கிறது, இப்படி இரண்டுங் கெட்டானாக இருப்பதாலே தானே நான் எல்லாவற்றிற்கும் போகவேண்டியிருக்கு! அவளுக்கு..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அலங்காரம் குறுக்கிட்டு "மச்சான் அதெல்லாம் அப்பாலே பேசிக்கலாம், முதலில் போய்ப் பார்த்துவிட்டு வாங்க" என்று சொன்னதும் அவன் அப்படியே கிளம்பி விட்டான்.

*　　*　　*

"என்ன சிங்காரி நாளைக்குக் கும்பாபிஷேகத்துக்கு தவறாம உங்க அக்காவோட வந்திடு தெரியுமா..."

"சரிங்க எசமான்; நான் போகட்டுங்களா, மணி ஆகுது"

"இரு போகலாம், சிங்காரி, உனக்கு யாரு இந்தப் பேரு வச்சது? பொருத்தமா இருக்கே."

"என்னங்க எசமான் கிண்டல் பண்றீங்க! குழந்தைகளுக்கு அப்பா அம்மாதானே பேர் வைப்பாங்கோ"

"அது தெரியும், ஒரு சமயம் உன் புருசன் வச்ச ஆசைப் பேரோன்னு பார்த்தேன்"

சிங்காரி இதைக் கேட்டதும் கண்களில் கண்ணீர் ததும்ப "எசமான் அவரோடு நான் பேசினதுகூட இல்லையே—காலையிலே கலியாணம் ஆச்சு — சாயங்காலம் தோட்டப் பக்கம் போகும்போது பாம்பு கடிச்சு இறந்துட்டாரு" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவளால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தன் முந்தானையால் முகத்தை மூடி, விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள். திடீரென்று அவள் முதுகின்மீது, முரடான கை படவே திடுக்கிட்டுப் பார்த்து "எசமான்..." என்று ஒதுங்கினாள்.

"சிங்காரி....வருத்தப்படாதே. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே

துணை — உன்னைப் போன்றவர்களுக்கு நாங்கள்தானே துணை'' என்று சிறிது நெருங்கினார்.

"எசமான் என்ன இது அக்கிரமம்! இதுதானா உங்கள் தெய்வ பக்தி?''

"தெய்வபக்திக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஆண்டவன் செய்யாததா நான் செய்கிறேன். சிங்காரி! இதோ பார், எனக்கு இருக்கும் இவ்வளவு சொத்தும் ஏன் வீணாகவேண்டும்? வேண்டுமென்றால் உன் எடைக்கு எடை தங்கமே தருகிறேன்... நீ மாத்திரம்...

"இது என்ன துலாபாரமா! பணம் எங்களுக்குப் பிரதானமில்லை. எங்களுக்கு மானம்தான் முக்கியம்''

"நான் உன் கற்பைச் சூறையாடவில்லையே... நீயே இசைந்து என் ஆசைநாயகியாக இரு'' என்று சொல்லிக்கொண்டே அவள் கைகளை எட்டிப் பிடிக்க, கண்ணாடி வளையல்கள் நொறுங்கின.

* * *

வழியெல்லாம் முனுசாமிக்கு, எப்படியாவது அந்த அருந்த சங்கிலியை வீட்டை விட்டு வெளியே எறிந்துவிடவேண்டும். எப்படியாவது இவளையும் கண்டதை எடுத்துச் சேர்க்காதவாறு திருத்தவேண்டும் என்ற எண்ணம் அவன் மனதை அரித்துக் கொண்டிருந்தது. இதற்குத் துணையாகச் சிங்காரியைத்தான் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, எப்படி அவளை எளனம் செய்வது என்ற யோசனையில் ஆழ்ந்தான். யோசனை வரவில்லை என்றாலும், அருணாசல முதலியார் வீடு வந்துவிடவே திரும்பினான். பங்களாவைக் காவல் காக்கும் கூர்க்கா "க்யா... தங்கச்சி... உள்ளே இருக்குது. போ'' என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டான். முனுசாமியும் அவனுக்கு நன்றி தெரிவிக்கும் தோரணையில் புன்னகை புரிந்து பங்களாவில் நுழைந்ததும் "சிங்காரி... சிங்காரி எங்கே ஓடறே'' என்ற சப்தம் மாடியிலிருந்து கேட்கவே, மாடிப் பக்கம் திருமபினான். எதிரே சிங்காரி அலங்கோலமாக கையில் இரத்தக் கறையுடன் ஓடிவந்தாள்.

"மச்சான்...''

"சிங்காரி... என்ன இது... ஏதாவது...''

"உஷ்... பேசாதிங்கோ... வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம்''

"என்ன சமாசாரம் சொல்... கையிலே இரத்தம்......... ஏதாவது...''

"வாங்க மச்சான், நான் விபரமாகச் சொல்கிறேன்'' என்று மச்சானை இழுத்துக்கொண்டு சிங்காரி வெளியேறினாள்.

அருணாசல முதலியார் முகத்தில் கீறல்களுடன், "சிங்காரி...

அடிப்பாவி! முகமெல்லாம் வளையல் துண்டுகளால் கீறிவிட்டாளே, நாளைக்கு எந்த முகத்தோடு கும்பாபிஷேகத்திற்குப் போவது? வடிவுடை அம்மனே! அகிலாண்ட நாயகியே! உன் திருவருள் இதுதானா? இதற்குத் தானா உனக்குக் கும்பாபிஷேகம்'' என்று சொல்லிக்கொண்டே மெதுவாகத் தரையிலிருந்து எழுந்து குளியலறை நோக்கிச் சென்றார்.

* * *

''சிங்காரி ஏன் இதை அங்கேயே சொல்லியிருக்கக்கூடாது? அவனை உயிருடன் விட்டு வைக்கலாமா?''

''மச்சான் உனக்குக் கோபம் வந்து ஏதாவது அவசரத்திலே செஞ்சிடுவேன்னுதான் நான் சொல்லலே''

''இதற்குத்தான் வெளிவேஷம் போடுகிறான் போல் இருக்கு. திருநீறுக்கும் குங்குமத்துக்கும் குறைச்சலில்லே! நாளைக்குக் கும்பாபிஷேகம் செய்யும் பக்தன் செயலா இது! விதவை என்ன புறம்போக்கு நிலம் என்று நினைத்துவிட்டானா? இனி நீ வேலைக்குப் போகவேண்டாம்''

''சரிங்க மச்சான்; எனக்குப் பயமா இருக்கு, பணத் திமிர் பிடித்தவன் எதாவது செய்வான்''

''என்ன செய்வான் என்பதை நான் ஒரு கை பார்த்துடறேன் — சிங்காரி! அதோட எனக்கு இப்போ ஒண்ணு ஞாபகம் வந்தது; உங்க அக்கா கண்டதைக் கொண்டுவந்து வீட்டில் சேர்க்கிறாளே அந்தப் பழக்கத்தை விட்டு விடச் செய்யணும்...சிங்காரி...நீ கலியாணம் செய்துண்டா இந்தத் தொந்தரவே வராது. வேலியில்லா தோட்டம்னா கண்டதும் நுழையத்தான் செய்யும்''

''போதும் மச்சான், அறுத்திட்டவளை எவனாவது கட்டிக்குவானா?''

* * *

அடுத்த வாரம் பொங்கல், திராவிடர் திருநாள்.—சிங்காரி அடுக்களையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். முனுசாமி லாந்தல் விளக்கு வெளிச்சத்தில் சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக்கொண்டிருந்தான். திடீரென்று அந்த அறுந்த சங்கிலி ஞாபகம் வந்தது. எப்படியாவது சிங்காரிக்குத் தெரியாமல் எடுத்து எறிந்துவிட வேண்டும் என்று தேட ஆரம்பித்தான்! இருட்டிலே பெட்டியில் துழாவும்போது ஒரு தகரத்துண்டு அவன் விரலைப் பதம் பார்த்துவிட்டது. அதையும் சொல்லிக்கொள்ளாமல் ஒரு ஈரத் துணியை விரலுக்கு கட்டிக் கொண்டு தேடினான். கடைசியாக அறுந்த சங்கிலி பிப்பாயின் சந்தில் பாம்பைப்போல் இருந்ததைக் கண்டு முதலில் பயந்து, பிறகு எடுத்துக் கொண்டு மெதுவாக வீட்டை விட்டு வெளியே வந்து விட்டான். பங்களாப் பக்கம்

போனால் ஒரு சமயம் அலங்காரம் பார்த்துவிடலாம் என்ற எண்ணத்துடன் பங்களாவின் பின்புறமாகச் செல்லும் ஒரு சந்தில் வீசி யெறிந்து திரும்பினான். "ஐயோ" என்ற அலறல் கேட்டதும், தான் போட்டது யார் மேலேயோ விழுந்துவிட்டது என்ற எண்ணத்துடன் பங்களாவின் பின்புறக் கதவை மெதுவாகத் திறந்துகொண்டு ஓடினான். இருட்டில் ஓர் உருவம் மதில் ஓரமாகச் சாய்ந்துகொண்டு முனகிக் கொண்டிருந்தது. ஓடிப்போய் அருகில் பார்த்தபோது பயந்து அவனைத் தூக்கி வந்து தெரியாமல் தன் வீட்டில் படுக்க வைத்து "சிங்காரி இதோ இந்தத் தம்பியைப் பார்த்துக்கோ! கொஞ்சம் சூடா டீ போட்டுக் கொடு, நான் போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வரேன்" என்று சொல்லிக் கிளம்பினான்.

"யார் மச்சான் இது! ஐயோ ரத்த வெள்ளமா இருக்கே இவர் தலை! அட படுபாவிங்க..."

"சிங்காரி, நீ ஒண்ணும் தொந்தரவு படுத்தாதே. அப்படியே ஒரு கட்டு கட்டி, டீ போட்டுக் கொடு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவனோ உணர்வின்றிக் கட்டைபோல் படுத்திருந்தான். இவள் சுடச் சுட டீ போட்டுக் கொண்டு வந்து, எப்படிக் கொடுப்பது என்று யோசித்தாள்; முதலில் அவனைத் தட்டிப் பார்த்தாள். ஸ்பரிசம் பட்டவுடன் இவள் உடம்பெல்லாம் சூடேறி இவளுக்கு வியர்வை கொட்ட ஆரம்பித்துவிட்டது. கடைசியாக வெட்கமும் ஊற்றுணர்ச்சியும் போட்டியிட மெதுவாக அந்த அரும்பு மீசைக்காரனை சுவரில் சாயவைத்து விட்டு, சூடான தேநீரை அவன் வாயருகில் கொண்டுபோனாள்... இரண்டு மூன்று விழுங்குகள்... அவன் மெதுவாகக் கண் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். யாரோ ஒரு பெண் தனக்குத் தேநீர் கொடுப்பதைக் கண்டவுடன், அவனுக்கு தான் எங்கே இருப்பது என்று தெரியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்... நீ யார்?" வெட்கம் பிடுங்க, அவள் அங்கிருந்து எழுந்து கதவின் பின்னால் போய் நின்றுகொண்டு "என் பெயர் சிங்காரி...என் மச்சான் உங்களைக் கொண்டுவந்து படுக்கவச்சுட்டு டாக்டர் வீட்டுக்குப் போயிருக்காரு, நீங்க யாரு? ...எப்படி அடி பட்டது?"

"உம்......தெரிய வேண்டுமா! என் பெயர் சிங்காரம். "திருவள்ளுவர்" என்ற ஒரு வார இதழில் வேலை செய்கிறேன்! நான் போய் வருகிறேன்."

"வீட்டிற்குத்தானே? டாக்டர் வரட்டும்"

"வீட்டிற்கில்லை, அலுவலகம் போகவேண்டும்."

"இந்த நேரத்தில் அலுவலகத்தில் என்ன வேலை? மணி ஒன்பதடிக்கப்போகிறது."

"அடுத்த வாரம் பொங்கல்—பொங்கல் மலர் தயாராகிக் கொண்டு இருக்கிறது."

"என்ன இருந்தாலும், டாக்டர் வரட்டும். அதோட இந்தக் காயம் ஆறும் வரை நீங்கள் இங்கேயே இருப்பது நல்லது. உங்களுக்குத்தான் யாருமில்லையே..."

"யாருமில்லேத்தான்....ஆனால் ..." என்று அவன் அவளைப் பார்க்க, அவள் வெட்கத்தால் தலை குனிந்து கால் விரலால் தரையைக் கிறிக்கொண்டிருந்தாள்.

* * *

நாளை பொங்கல், எங்கும் கோலாகலம், முனுசாமியின் வீட்டில் மாத்திரம் குறைவா! சிங்காரி அடுக்களையில் சமையல் செய்து கொண்டிருக்க, முனுசாமியும் அலங்காரமும் தங்கள் முதல் பொங்கல் அனுபவத்தை நினைத்து ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

"அண்ணு"

"யார் அது சிங்காரமா...வா...வா...இதென்ன பெரிய பொட்டளம்."

"அண்ணு, சிங்காரிக்கு பரிசம் போட வேண்டாமா."

"சிங்காரிக்கா......அவள் விதவை"யென்று...

"அண்ணு, எல்லாம் தெரியும்! அவளே ஒரு நாள் என்னிடம் எல்லாம் சொன்னுள். தெரிந்து தான் செய்துகொள்கிறேன். என்னைப் போல் ஒரு சில இளைஞர்கள் முன்வந்து விதவைகளைத் திருமணம் செய்துகொண்டால்தான், பெண்களின் துயரம் துடைக்கப்படும். அண்ணு! நீங்கள் இல்லை என்றால் நான் சிங்காரியைப் பார்த்திருக்க முடியுமா? உங்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டவன்."

"அடேடே! எனக்கு இல்லே! எல்லாம் உன் அண்ணிக்குத்தான். அவள் அந்த அறுந்த சங்கிலியைக் கொண்டு வரலேன்னு நீ வந்திருக்க முடியாது" என்று முனுசாமி சொல்ல...

"என்னுலே என்ன இருக்குது? எல்லாம் அந்த அறுந்த சைக்கல் சங்கிலியால்தான் தம்பி; அதன் நினைவாகச் சிங்காரி கழுத்திலே ஒரு சைக்கில் செயின் மாதிரியில் தங்கச் சங்கிலி போட்டுடு" அலங்காரம் குறுக்கிட்டுச் சொன்னுள்.

"அப்படியே ஆகட்டும் அண்ணி! நான் இது வரை சேர்த்திருக்கிற பணத்திலே செய்து போட்டுடறேன்" என்று சொல்லிக் கொண்டே அவர்களிடம் "திருவள்ளுவர்" பொங்கல் மலரைக் கொடுத்து அவர்களை இன்புறச் செய்துவிட்டு, வீட்டிற்குள் சென்றுன் சிங்காரம்.

—"திராவிட நாடு"

சார்லஸ் டார்வின்

(எஸ். சிவசுப்ரமண்யம், பி. எஸ் ஸி.,
துணைப் பேராசிரியர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி.)

சார்லஸ் டார்வின் பெரும் புகழ் பெற்ற ஓர் ஆங்கிலேய விஞ்ஞானப் பெரியார்; சிறந்த உயிர் நூல் நிபுணர்; கீர்த்தி வாய்ந்த இராஸ்மஸ் டார்வினின் பேரன். இவர் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் உயிர்த் தோற்றமுறையை (Organic Evolution) விளக்கிக் காட்டினார். இவரது உயிர்த் தோற்றமுறைக் கொள்கையை "இனத் தோற்றம்" (The Origin of Species) என்ற புத்தகத்தின் மூலம் வெளியிட்டார். இப்புத்தகம் உகலப் புகழ் பெற்ற புத்தகங்களில் ஒன்று. இதற்கு முன்போ பின்போ அறிவுத் துறையில் இதுபோல மனித சிந்தனையைத் தூண்டிய புத்தகம் கிடையாது என்றே சொல்லலாம். இந்த ஆண்டு இப்புத்தகத்தின் நூற்றாண்டு விழா உலகின் பல பாகங்களிலும் உயிர் நூலறிஞர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. (இந்நூல் 1859-ம் ஆண்டில்தான் நூல் வடிவில் வெளிவரலாயிற்று. எனினும் 1858-ம் ஆண்டிலேயே இதன் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.) இந்நிலையில் நாம் டார்வினின் வாழ்க்கையையும் கொள்கையையும் பற்றிச் சிறிது அறிய முற்படுவது பொருத்தமே.

நாம் இவ்வுலகில் பற்பல விதமான தாவரங்களும், பிராணிகளும் வாழ்வதைப் பார்க்கிறோம். தாவரங்களில் பல்லாயிர வகைகள் இருக்கின்றன. பிராணிகளில் பல்லாயிர வகைகள் இருக்கின்றன. அவைகளுள் நிலத்தில் வாழ்வன இருக்கின்றன; நீரில் வாழ்வன இருக்கின்றன. மிகப் பெரிய உருவங்களுடையன பல. கண்ணுக்குப் புலப்படாத சிறிய உருவமுள்ளனவும் பல. இவ்விரண்டிற்கு மிடையே எத்தனையோ உருவங்களும் உடலமைப்புக்களும் கொண்ட உயிரினங்கள் உண்டு இவை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் இருக்கிறான். இப்படியாகப் பல தரப்பட்ட உயிர்களையும் பற்றி ஆழ்ந்து கவனிக்கும்போது இவைகளெல்லாம் இவ்வுலகில் முதன் முதலில் எப்படித் தோன்றின என்ற வினா நம் மனதில் எழுகிறது. இந்த வினா பழங்காலந் தொட்டே உலகில் பல தேசத்தினர்களிடையும் பல சமயங்களில் தோன்றியது. அவர்கள் அதற்கு வெவ்வேறு விதமான விடைகளை அளித்ததுண்டு. ஆனால் விஞ்ஞான ரீதியில் ஒன்றும் அமைந்தது கிடையாது. உயிரினங்கள் தோன்றியதைப்பற்றி கிருஸ்துவ மத நூலாகிய பைபிளில் கூறப்பட்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதன் கருத்து என்னவென்றால், இவ்வுலகி

ளுள்ள மனிதன் உட்பட எல்லா உயிர்களையும் கடவுள் தனித்தனியாக உலகம் ஆரம்பிக்கும்போதே படைத்தார் என்பது. அதன்படி இவ்வுலகம் தோன்றினபோது ஒரு மனித தம்பதி, ஒரு ஜோடி மாடு, ஒரு ஜோடி நாய், ஒரு ஜோடி பூனை, ஒரு ஜோடி பனை மரம், ஒரு தென்னை மரம், ஒரு ரோஜா செடி, ஓர் அவரைக் கொடி, இப்படியாக சகலவித உயிர் வர்க்கங்களிலும் ஒவ்வொன்று படைக்கப்பட்டிருக்க வேண்டும். இவைகளின் நேர் சந்ததிகள்தாம் தற்கால மனிதர்களும், விலங்குகளும், தாவரங்களுமாம். இந்தப் புராதன சிருஷ்டி முறைக் கொள்கை விஞ்ஞான ஆதாரமற்றது. ஆகவே தற்காலத்தில் இதை யாரும் ஒப்புக்கொள்வதில்லை.

சுமார் 150 வருடங்களுக்கு முன்புதான் ஆராய்ச்சியாளர்கள் உயிர்கள் தோன்றிய முறையை விஞ்ஞான ரீதியில் விளக்க முற்பட்டனர். இதைப்பற்றிய அவர்களின் கொள்கைக்கு "உயிர்த் தோற்று முறைக் கொள்கை" அல்லது "உயிர்ப் பரிணமக் கொள்கை" (Theory of Organic Evolution) எனப் பெயர். அதன்படி இவ்வுலகில் இப்பொழுது காணப்படும் உயிர்கள் எல்லாம் ஆரம்பத்தில் ஒன்றாகத் தோன்றவில்லை. ஆதியில் ஒரு சமயம் இவ்வுலகில் உயிர் வர்க்கமே கிடையாது. முதன் முதலில் கடலில் ஒரு சிறு உயிரணுவாக (a speck of protoplasm) உயிர் உதயமாயிற்று. அதற்குப் பிறகு கோடிக்கணக்கான நூற்றுண்டுகள் செல்லச் செல்ல அந்த உயிரணுவின் அகச் சக்தியின் காரணத்தால் அது மாறி மாறி அதிலிருந்து பல்வேறு உயிர்கள் உண்டாயின. முதலில் ஒரே கண்ணறை உயிர்கள்தான் (unicellular organisms) இருந்தன. பிறகு அவைகள் நாளாவட்டத்தில் மாறுபாடடைந்து பல கண்ணறைகளுள்ள உயிர்களாகத் (multicellular organisms) தோன்றின. முதன் முதலில்ஏற்பட்ட எல்லா உயிர்களும் நீர்வாழ்வன (aquatic). அவைகளிலிருந்து தாவரங்களுள் பாசங்களும், பிராணிகளுள் தவளைகளும் போன்ற தரைநீர்வாழிகள் (amphibians) உண்டாயின. பிறகுதான் தரையில் வாழ்வன தோன்றின. காலஞ் செல்லச் செல்ல ஆதி உயிர்களிடையே அமைப்பில் வேற்றுமை ஏற்பட்டு அவைகளுள் சூழ்நிலைக்குப் பொருத்தமானவை தங்கி மற்றவை மடிந்தன. இப்படியாகப் பலவித தாவரங்களும், மிருகங்களும் ஏற்பட்டன. உதாரணமாக நாய்களும் பூனைகளும் இப்பொழுது இருக்கும் உருவத்தில் படைக்கப்படவில்லை. ஆனல் காட்டு நாய், காட்டுப் பூனை முதலிய மிருகங்களின் சந்ததிகள் நாளாவட்டத்தில் உருமாறித் தற்போதைய உருவங்களை அடைந்திருக்கின்றன. அதேபோன்று இப்போதுள்ள ரோஜா, காட்டு ரோஜாவிடமிருந்து வந்தது.

ஆகவே தற்போது காணப்படும் தாவரங்களும், மிருகங்களும் உலகம் தோன்றியவுடன் முதன் முதலில் இருந்திருக்க முடியாது.

இத் தோன்றுமுறைக் கொள்கையின் கருத்துக்களைப் பலர் டார்வினுக்கு முன்பு வெளியிட்டிருக்கின்றனர். எனினும் டார்வின்தான் முதன்முதலில் அக்கொள்கையை அநேகர் நம்பும்படியாகச் செய்து தோன்றுமுறை எண்ணத்தை மனித சிந்தனையில் ஊன்றச் செய்தவர். அவர் ஆராய்ந்து எடுத்துக் காட்டிய விஞ்ஞான அத்தாட்சிகள், எல்லோரும் அக்கொள்கையை நம்பும்படியாக அமைந்திருக்கின்றன. முதலில் டார்வினுடைய கொள்கையைக் கேட்டுத் திடுக்கிட்டு அது கடவுள் தத்துவத்திற்கு விரோதமானது என்று குறை கூறினர் பலர். அவரது "இனத் தோற்றம்" என்ற புத்தகத்தை முற்றிலும் எதிர்த்தனர். அதனால் உலகெங்கும் இக்கொள்கையைப் பற்றி வாதம் ஏற்பட்டு நெடுநாள் நடந்தது.

டார்வின் 1809-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ந் தேதி இங்கிலாந்தில் 'ஷ்ரூஸ்பரி' என்ற ஊரில் பிறந்தார். தன் தாய் தந்தையர்களுக்கு ஐந்தாவது பிள்ளை. எட்டு வயது முடிவதற்குள் தன் தாய் இறந்தாள். ஆகவே டார்வின் தன் தந்தையாலும், சகோதரிகளாலும் வளர்க்கப்பட்டார்.

உலகெங்கும் உயிர்நூல் நிபுணர் என்ற புகழ்பெற்ற டார்வின் பள்ளிக்கூடத்தில்படிக்கும்போது சிறந்த மாணவன் என்ற பெயர் ஒன்றும் வாங்கவில்லை; சாதாரண மாணவனாகவே இருந்தார். அக்காலத்தில் அவருடைய பள்ளிக்கூடத்தில் லத்தீன், கிரேக்க மொழிகளும், சிறிது பூகோளமும், சரித்திரமும்தான் சொல்லிக் கொடுத்தனர். விஞ்ஞானம் உபயோகமற்ற ஒரு பாடம் என அந்நாளில் கருதினர். டார்வினுக்கு விளையாட்டுகளிலும், வேட்டையாடுவதிலும் விருப்பம். நாய் வளர்ப்பதில் ஆசை. மிருகங்களிடம் அன்பு காண்பித்தார்.

பொருள்களைச் சேகரிப்பதில் இளம் பிராயத்திலிருந்தே டார்வினுக்கு அதிக அவா உண்டு. முக்கியமாகக் கனிதப் பொருள்கள், வண்டுகள், மற்ற பூச்சிகள் முதலியவற்றைச் சேகரித்து வைப்பதில் இன்பமும் ஊக்கமும் காட்டினார். டார்வின் இளம் பிராயத்தில் ஆர்வத்துடன் புத்தகங்கள் படிப்பதுண்டாம். ஷேக்ஸ்பியரின் சரித்திர நாடகங்களை மணிக்கணக்கில் உட்கார்ந்துகொண்டு படிப்பாராம்.

பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் தம் தகப்பனர் பாட்டனர் போல சார்லஸும் டாக்டராகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே நம் டார்வின் மருத்துவம் படிப்பதற்காக எடின்பரோ சர்வகலாசாலையில் சேர்ந்தார். ஆனல் மருத்துவக் கல்வி பிடிக்காமல் போகவே எடின்பரோவை விட்டு விட்டு எம். ஏ. பட்டம் பெறு

வதற்காக கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் சேர்ந்தார். இங்கேயும் பாடுபட்டுப் படிக்காமலேயே காலத்தை இன்பமாகக் கழித்துப் பட்டம் பெற்றாராம். கல்லூரியில் படிக்கும்போது தன் ஓய்வு நேரங்களையெல்லாம் வேட்டையாடுவதிலும், குதிரைச் சவாரி செய்வதிலும், வண்டுகள் சேகரிப்பதிலும் செலவழிப்பாராம்

1831-ம் ஆண்டில் "பீகில்" (H. M. S. Beagle) என்ற கப்பலில் டார்வின் செய்த கடற் பிரயாணம் அவரது வாழ்க்கையில் அதிமுக்கியமான சம்பவம். அவ்வாண்டில் காப்டன் பிட்ஸ்ராய் (Captain Fitzroy) என்பவரின் தலைமையில் "பீகில்" என்ற கப்பலில் தென் அமெரிக்கக் கடலோரங்களையும், அதைச் சார்ந்த தீவுகளையும், உலகத்தின் மற்ற பாகங்களையும் தேடிக்காணும் பிரயாணம் ஒன்று ஆரம்பித்தது. சார்லஸ் டார்வின் இக்கப்பலின் உயிர் நூலறிஞராகச் சேர்ந்தார். இந்தச் சுற்றுப் பிரயாணம் ஐந்து வருடகாலம் பிடித்தது. தென் அமெரிக்கக் கடலோரங்களை 'சர்வே' செய்துவிட்டு பீகில் கப்பல் கலப்பகாஸ் தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஸீலண்டு, டாஸ்மேனியா, மால்டிவ் தீவுகள், மோரிஷஸ், ஸெயின்ட் ஹெலனா, அஸன்ஷன், அஸோர்ஸ் முதலிய பலவிடங்களுக்கும் சென்றது. இந்தப் பிரயாணங்களில் டார்வின் இயற்கையின் பல அற்புதங்களை நேரில் கண்டார். அவருக்கு பூமி நூலிலும், விலங்கு நூலிலும் நடைமுறை அறிவு ஏற்பட்டது. உலகின் பலவித சூழ்நிலைகளையும், தாவர சமூகங்களையும், விலங்கினங்களையும், பறவைகளின் வாழ்க்கைகளையும் நேரில் கண்டறிந்தார்.

இந்த உன்னதமான சுற்றுப் பிரயாணம் முடிந்து 1836-ல் வீடு திரும்பியபோது டார்வின் பலவிதமான தாவரங்களும், பூக்களும், விலங்கினங்களும், பறவைகளும், கல்மாறிகளும் (Fossils) இன்னும் அநேக பொருட்களும் சேமித்துக்கொண்டு வந்தார். இவைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து, ஆராய்ந்தறிந்து பிறகு தான் வளர்த்து வந்த புறாக்கள், கோழிகள், நாய்கள், தேனீக்கள், செடிகள் முதலியவற்றோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கும்பொழுது குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த எல்லா உயிர்களிடையேயும் சில ஒற்றுமைக் குணங்கள் தென்பட்டன. பிறகு பல்வேறு விதமான தாவர இனங்களும், விலங்கினங்களும் எப்படி இவ்வுலகில் தோன்றின என்று ஆராயத் தலைப்பட்டார்.

1839-ம் ஆண்டில் டார்வின் எல்மா வெட்ஜ்வுட் என்பவளை மணந்தார். திருமணத்திற்குப் பிறகு லண்டன் மாநகரில் குடிபுகுந்தார். ஆனால் உடல் நிலை காரணமாக லண்டனைவிட்டு நாட்டுப்புறமான டௌனி என்னும் இடத்திற்குச் செல்ல நேர்ந்தது. அமைதி நிலவிய இந்தச் சிற்றூரில் தான் டார்வின் தனது உயிர்த்

தோற்றுமுறைக் கொள்கையை ஆராய்ந்து உருவாக்கினர்.

கொள்கையை எழுதி முடித்து விட்டார். ஆனால் இன்னும் வெளியிடவில்லை. அந்தச் சமயத்தில் ஒருநாள் அப்போது மலேயாவிலிருந்த அவரது நண்பர் பிரபல உயிர் நூல் நிபுணர் ஆல்ப்ரட் ரஸ்ஸல் வாலஸ் (Alfred Russel Wallace) என்பவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் டார்வின் எழுதி வைத்திருந்த உயிர்த் தோற்றுமுறைக் கொள்கையின் அதே பொருள்கொண்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை அனுப்பப்பட்டிருந்தது. தன் நண்பர் மனதிலும் ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான கொள்கை ஏற்பட்டிருப்பதைக் கண்ட டார்வின் திகைத்துப் போனர். இந்தக் கடிதம் வந்த பிறகு தன் கொள்கையை வாலஸிடம் சொல்லாமல் வெளியிட மனம் வரவில்லை. இந்த விஷயத்தை டார்வின் மற்ற நண்பர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் இருவருடைய கொள்கையும் ஒரே சமயத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று தீர்மானித்தனர். அப்படியே 1858-ல் வெளியிடப்பட்டது. எனினும் இதுபற்றி டார்வினுடைய பெயர் தான் நிலைத்தது.

டார்வின் கொள்கையடங்கிய உலகப் பிரசித்தி பெற்ற "இனத் தோற்றம்" என்ற நூல் 1859-ல் வெளிவந்தது. இப்புத்தகத்திற்கு முன் கூறியதுபோல முதலில் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனல் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், ஹக்ஸ்ஸி, வெய்ஷ்மன் முதலிய இயற்கை நூலறிஞர்கள் டார்வினுடைய கொள்கையை ஆதரித்தனர். இவர்கள் கொள்கையை எளிய முறையில் எடுத்துச் சொல்லி விளங்க வைத்தும், மேன்மேலும் சான்றுகள் சேகரித்தும் டார்வின் கொள்கையை நிலைநாட்ட அரும்பாடு பட்டனர். பலரும் இக்கொள்கையைப் புரிந்து கொண்டு ஆதரவளிக்கப் பல ஆண்டுகள் ஆயின.

அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டபோதிலும் டார்வின் தன் வாழ்நாள் முழுவதும் மேன்மேலும் ஆராய்ச்சிகள் செய்துகொண்டே இருந்தார். "மனிதன் வந்த விதம்" (The Descent of Man), "மனிதனும் விலங்குகளும் உணர்ச்சிகள் வெளியிடுதல்" (Expression of Emotions in Man and Animals) முதலியன அவரது ஆராய்ச்சி நூல்களில் முக்கியமானவை. தனக்குச் சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களைக் கூர்ந்து பார்த்து அறியும் சக்தி அதிகமாக இருந்ததுதான் தன் வெற்றிக்குக் காரணம் என்று டார்வின் சொல்லியிருக்கிறார்.

1882-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் தேதி டார்வின் காலமானர். ஆனல் இவ்வுலகத்தைப் பற்றிய மனிதரின் கருத்தை மாற்றியமைத்த இந்த விஞ்ஞானப் பெரியாரின் புகழுடம்பு இவ்வுலகுள்ளளவும் நிலவும்.

— பச்சையப்பன் கல்லூரி இதழ்.

ஆயிரம் பயன் தரும் பழம்

(கீத் வார்னர்)

சாதாரண எலுமிச்சம் பழம் - பல்லைக் கூசச் செய்யும் புளிப்பான இந்தப் பழம் - எத்தனை எத்தனை காரியங்களுக்கு உபயோகப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமோ?

புற்று நோய் (கான்ஸர்) வந்தவர்களுக்கு எக்ஸ்-ரே சிகிச்சை செய்வதால் கெடுதி உண்டாகக் கூடும். அதைத் தடுக்க இந்தப் பழம் உதவுகிறது. 'லெமன் மெரிங்கு' என்ற இனிப்பான பணியாரம் செய்யப் பயன்படுகிறது; உருக்கைக் கடினமாக்க உபயோகப்படுகிறது. காயமுற்றவரின் ரத்தப் பெருக்கு அதிகமாகாமல் தடுக்கப் பயன்படுகிறது. சாதாரணக் காகிதப் பையில் இந்தப் பழச்சாற்றைத் தடவி விட்டால், அதில் கிரீஸ் (grease) புகாது; பெட்ரோலைக்கூட ஊற்றி வைக்கலாம்.

எலுமிச்சம் பழச் சாற்றால், மசிக் கறை மறையும். இந்தச் சாற்றை மீன்மீது தெளித்து ஐஸ் பெட்டியில் வைத்தால், அது பல நாள் வரையில்கூடக் கவிச்சு வாடை வீசாதிருக்கும். வாழை, ஆப்பிள் போன்ற பழங்களைக் காற்றுப் படும்படி வைத்தால், அவை பொதுவாக கறுத்துப் போகும்; ஆனால், அவற்றின்மீது எலுமிச்சம்பழச் சாற்றைத் தடவி அப்படி வைத்தால், இந்த மாதிரி அவை கறுப்பதில்லை. எலுமிச்சம் பழச் சாறு சில சமயம் ரத்தத்துக்குப் பதிலாகக் கூட உபயோகப் படுகிறது.

எலுமிச்சம் பழத்துக்கும் அதிலிருந்து கிடைக்கும் உபபொருள்களுக்கும் நாம நினைத்தே பிராத எத்தனை எத்தனையோ உபயோகங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் இங்கே சொல்லுவதென்றால் சாத்தியமில்லை. முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன்.

உபயோகமற்றது என்று குப்பைத் தொட்டியில் எறிகிறோமே, அந்த எலுமிச்சம் பழத் தோலில் ஒரு சத்து இருக்கிறது. அந்தச் சத்துக்கு வருங்காலத்தில் பெரிய உபயோகம் ஒன்று காத்திருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் எலிகள்மீது அந்தச் சத்தைப் பரீட்சித்துப் பார்த்ததில் இந்த விஷயம் தெரிந்தது; அணுக் குண்டு, ஹைட்ரஜன் குண்டு இவை வெடித்தால் ஏற்படும் கதிரியக்கம் (ரேடியேஷன்) நம்மைப் பாதிக்காமல் தடுக்கக்கூடியது அந்தச் சத்து. பயோஃப்ளேவின் என்று அந்தச் சத்துக்குப் பெயர். அதை எலுமிச்சம் பழத் தோலிலிருந்து இறக்கி எலிகளுக்கு உணவாகக் கொடுத்தார்கள். பிறகு, சாதாரணமாக உயிருக்கே அபாயமான அளவு கதிரியக்

கத்தை அந்த எலிகள் மீது செலுத்திப் பார்த்தார்கள். எலிகளுக்குத் தீங்கு உண்டாகவில்லை.

எலுமிச்சம் பழத்தோலில் உள்ள இந்தச் சத்துக்குக் கதிரியக்கத் தீங்குகளைத் தடுக்கும் ஆற்றல் உண்டு என்பது முதலில் டாக்டர்களுக்கு எப்போது தெரிந்தது? புற்று நோய்க்காரர்களுக்கு எக்ஸ்-ரே சிகிச்சை செய்யும்போது தான் தெரிந்தது. பயோஃப்ளேவின் என்ற இந்தச் சத்தைக் கலவை செய்து தயாரித்த மருந்துகளை அந்த நோயாளிகளுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு எக்ஸ்-ரே என்ற கதிர்களை அவர்கள்மீது எவ்வளவு அதிகமாகச் செலுத்தினாலும் நோயாளிகள் தாங்கிக் கொண்டதை டாக்டர்கள் கண்டார்கள். அணுக்குண்டு வெடிப்பதால் உண்டாகும் கதிர் இயக்கமும் எக்ஸ்-ரேயின் கதிரியக்கம் போன்றதுதான். எனவே, எலுமிச்சம் பழத்தோல் சத்தால், புற்றுநோய்க்காரர்களைப் போலவே சாதாரண ஜனங்களும் அதிக அளவு கதிரியக்கத்தைத் தாங்கிக்கொள்வார்கள் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

வெள்ளைத் துணிகளிலும் லினன் என்ற சணல் துணிகளிலும் ஏற்படும் பழக்கறைகளையும் துருக் கறைகளையும் போக்கடிக்க எலுமிச்சம் பழரசத்தில் உப்பைக் கரைத்துத் தேய்த்து நீரில் அலசினால் அந்தக் கறைகள் நீங்கிவிடும் என்பது அநேகமாக எல்லாருக்குமே தெரிந்திருக்கும். அலுமினியப் பாத்திரங்களைப் பளபளப்பாய்த் தேய்க்க இந்த ரசத்துக்கு இணையான பொருள் வேறு இல்லை.

கிழக்கே பர்மா நாட்டில்தான் முதல் முதல் எலுமிச்சை பயிராயிற்று என்று ஆராய்ச்சியாளர் எண்ணுகிறார்கள். நானூறு வருஷங்களுக்கு முன்புதான் எலுமிச்சம் பழம் இங்கிலாந்துக்குச் சென்றது. ஆயினும், இத்தாலியில் 1,600 வருஷங்களுக்கு முன்பே அதைத் தெரிந்திருந்தது. மத்தியக் கிழக்கு நாடுகளிலோ நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பே எலுமிச்சை புழங்கியிருக்கிறது. அங்கே புதை பொருள்களைத் தோண்டிப் பார்த்ததில் அவ்வளவு பழமையான எலுமிச்சம்பழ விதைகள் கிடைத்திருக்கின்றன.

எலுமிச்சம் பழத்தைப் புதிய உலகத்தில்—அதாவது, அமெரிக்காவில்—நுழைத்தவர் கிறிஸ்டாஃபர் கொலம்பஸ்தான் என்கிறார்கள். அட்லாண்டிக் சமுத்திரத்தில் கப்பல் பிரயாணம் செய்து கொண்டே போகும்போது, கனரி தீவில் எலுமிச்சம் பழ விதைகள் கிடைத்தனவாம்; அவற்றைக் கொண்டுபோய் அமெரிக்காவில் அவர் நட்டாராம்.

எலுமிச்சம் பழத்தோலில் மிகவும் சக்தி வாய்ந்த ஓர் எண்ணெய் இருக்கிறது. ஐம்பது அல்லது அறுபது காலன் தண்ணீரில் இந்த எண்ணெயில் சில சொட்டு விட்டால் போதும்; அவ்வளவு

தண்ணீரும் கம கம என்று வாசனை வீசும். இந்த எலுமிச்சை எண்ணெய் எஸ்ஸென்ஸைப் பல வாசனைத் தைலங்களுக்கும் சேர்க்கிறார்கள்.

காய்ச்சல், தொண்டைப் புண், டான்ஸில் பருப்பது, வாதம், வீக்கம், ஜலதோஷம, வறட்டுச் சொறி, மூட்டு வலி இந்த நோய்களுக்கெல்லாம் வீட்டுச் சிகிச்சையாக எலுமிச்சம் பழத்தை அநாதி காலத்திலிருந்தே மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால், டாக்டர்களோ மிகச் சமீப காலத்திலேயே இதை ஆராயத் தொடங்கி யிருக்கிறார்கள்.

பழங்களில் பெக்டின் என்ற ஒரு சத்து உண்டு. குழம்பாயிருக்கும 'ஜெல்லி'யைக் கெட்டியாக்கி 'ஜாம்' ஆக உறைபச் செய்வது அது. எலுமிச்சம் பழத்தில் உள்ள 'லெமன் பெக்டின்' என்ற சத்தைக் காயத்தில் தடவினால், ரத்தம் உறைந்து பெருக்கு வெகு சீக்கிரம் தடைப்படும் என்பதை நவீன ஆராய்ச்சியில் கண்டார்கள். சென்ற மகாயுத்தத்தில் ஜெர்மன் ஸோல்ஜர்கள் தான் முதல் முதல் இதை உபயோகித்தார்கள். ஜெர்மன் அரசாங்கத்தார் இதை அந்த ஸோல்ஜர்களுக்கு ஸப்ளை செய்திருந்தார்கள்.

இதன் மேல் அமெரிக்க டாக்டர்கள் இன்னொரு விஷயம் கண்டுபிடித்தார்கள். இந்த 'லெமன் பெக்டின்' சத்தைக் கொண்டு தயாரித்த 'கரைசல்' (ஸொல்யூஷன்) ரத்தக் குழாய்களுக்குள்ளே சென்றால், ரத்தத்துக்குப் பதிலாகவே ஓடக்கூடிய சக்தி வாய்ந்தது என்று அவர்கள் கண்டார்கள். ஹேமோஃபிலியா என்ற நோய் உள்ள சிலர் உண்டு. அவர்களுடைய உடம்பில் மிகச் சிறு காயம் பட்டாலும் போதும்; ஏராளமாய் ரத்தம் பெருகி அவர்கள் எளிதில் மாண்டுவிடுவார்கள். இப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ரத்த பேதி (டிஸெண்ட்ரி), கிராணி (டயரியா) போன்ற நோய்களுக்குச் சிகிச்சை செய்யவும், எலுமிச்சம் பழத்திலிருந்து மருந்துகள் தயாரித்திருக்கிறார்கள்.

எலுமிச்சம் பழத்திலிருந்து இறக்கிய 'ஸிட்ரிக் ஆஸிட்' என்ற புளிச்சத்து, லெமனேட் போன்ற பானங்கள் செய்யப் பயன்படுகிறது; பேதி மருந்தாக உதவுகிறது; சமையலுக்கும் வறுவலுக்கும் உபயோகமாகிறது. 'லெமன் -பெக்டேட்' என்ற எலுமிச்சம் பழ உப்பை, பூமியிலிருந்து எண்ணெய் எடுப்பவர் கூட உபயோகப்படுத்துகிறார்கள். எண்ணெய்க்காகப் பூமியில் தொளை போடும் போது, அதில் இந்த உப்பைப் போட்டால், இது கால்ஸியம் என்ற சுண்ணாம்புச் சத்துடன் மோதுவதால், எண்ணெய் சரளமாக வர வழி ஏற்படுகிறது.

கையைமிருதுவாக்கிக்கொள்ள எலுமிச்சம் பழச் சாற்றைக் கையிலே தடவிக் கொள்பவர்

உண்டு; தலை மயிரில் அதைத் தடவிப் பதம் செய்துகொள்வோரும் உண்டு. ஆனால், இதே எலுமிச்சம் பழத்திலிருந்து எடுக்கும் உபபொருள் ஒன்று, இரும்பைக் கடினப்படுத்தவும் உபயோகமாகிறது என்று அவர்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ!

—'மஞ்சரி'

கால்நடைப் புள்ளி விவர பதிவு வேலை

ஆசிரியர்களுக்கு தலா ரூ. 20 ஊதியம் தர அனுமதி

சென்னை ராஜ்யத்தில் கால்நடைப் புள்ளி விவரப் பதிவு வேலையில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்குத் தலா ரூ. 20 தர சர்க்கார் அனுமதி அளித்துள்ளது என்று மேல் சபையில் மார்ச் 12-ந் தேதி உள்நாட்டிலாகா மந்திரி திரு பக்தவத்சலம் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார். சென்னை கார்ப்பரேஷன் உள்பட 41 முனிசிபாலிடிகள் இந்த ஊதியத்தைத் தந்துள்ளது என்றும், சாதாரணமாக இந்த வேலையைக் கிராமக் கர்ணங்கள்தான் செய்து வந்தார்களென்றும், ஆனால் அவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாதிருந்ததால் ஆசிரியர்களின் சேவை கோரப்பட்டது என்றும் மந்திரி மேலும் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் பென்ஷன் மனுக்கள்

ஆசிரியர்களுக்குப் பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்படுவது பற்றி சர்க்காரிடம் முறையிடப்பட்டது என்றும், ஆசிரியர்களின் பென்ஷன் மனுக்களை முதலில் துரிதமாகப் பைசல் செய்யுமாறு ஜில்லா போர்டு-விசேஷ ஆபீசர்களுக்கும், முனிசிபாலிடி நிர்வாக அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் மார்ச் 12-ந் தேதி மேல்சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் உள்துறை இலாகா மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

பதவியிலிருந்து விலகிய இரண்டொரு மாதத்திற்குள் ஆசிரியருக்குப் பென்ஷன் கிடைக்கும்படி விதிகளை சர்க்கார் சுளுவாக்குமா என்று கேட்டதற்கு முன்பெல்லாம் சர்வீஸ் விட்டுப் போயிருந்தால் சர்க்காரிடம் முறையிட்டுக்கொண்டால் மன்னிக்கப்பட்டு விடுமென்றும், ஆனால் சர்வீஸ் விட்டுப் போயிருந்தால் மன்னிக்க வேண்டியதில்லை என்றும், பதவியில் இருந்த காலத்தை மட்டும் கவனித்தால் போதுமென்றும் சர்க்கார் உத்தரவுகள் பிறப்பித்துள்ளதென்றும் மந்திரி விளக்கினார்.

— "தினமணி"

புதிய பாடத்திட்டப்படி இயற்றப்பட்ட —

சிறுவர் சமூக நூல்

நான்காம் வகுப்பு

ஆசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T. (Dip.in.Geog.)

சென்னை மாவட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்
தென் ஆர்க்காட்டு மாவட்டம்
வட ஆர்க்காட்டு மாவட்டம்
திருச்சி மாவட்டம்
தஞ்சை மாவட்டம்
கோயமுத்தூர் மாவட்டம்
சேலம் மாவட்டம்
நீலகிரி மாவட்டம்

ஒவ்வொன்றும் விலை ரூ. 1·87

மாதிரிப் பிரதி வேண்டுவோர் (ஒவ்வொன்றுக்கும்) ரூ. 1-30 ந. பை. அனுப்பவும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

குறிப்பு : அங்கீகாரமான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2/65, Broadway, Madras—1.